SS DIGITAL'S
Specialist in Digital Colour Printing
அச்சுத் தேவைக்கான தீர்வு
நியாய விலையில், விரைவான மற்றும் தரமான சேவை.
அனைத்து விதமான அச்சீடல் வேலைகளும்
A6,A5,A4,A3
கலர் லேசர் பிறின்டிங், கலர் போட்டோ கொப்பி
டைப் செட்டிங் & கிரபிக்ஸ் டிசைனிங்
உங்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதே
எமது ஒரே குறிக்கோள்
Con: 026-2224933, & ssdigitals.shan@gmail.com
No 58, Vidyalayam Road, Trincomalee.

ஆவணி மாதம் 31ம் திகதி September 16, 2012

# மலைமுரசு®

அறைவு 01 இயம் 08

MALAIMURASU

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை – 20.00

பிரதி ஞாயிறு தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் வார இதழ்

# ஆரம்பமாகின்றது சம்பூர் அனல் மின்நிலையப் பணிகள்!

## உள்ளூர் வழங்குனர்களை பதிவு செய்யக் கோரிக்கை

சம்பூரில் தொழிற்துறை வலையத்தை அமைக்கும் பணிகளிற்குத் தேவையான வளங்களைப் பெற்றுக் கொள்வதற்கான அறிவித்தல் பகிரங்கமாக வெளியாகியுள்ளது. ஸ்ரீ லங்கா கேட்வே இண்டஸ்ரீஸ் (தனியார்) கம்பனியினால் விடுக்கப்பட்டுள்ள இவ் அறிவித்தலின்படி திறமையும் முன் அனுபவங்களையுமுடைய நிபுணத்துவ நிறுவனங்களை சம்பூர் தொழில்துறை அபிவிருத்திப் பணிகளுக்காக தம்முடன் பதிவு செய்துகொள்ளுமாறு ஸ்ரீ லங்கா கேட்வே இண்டஸ்ரீஸ் (தனியார்) கம்பனி கோரியுள்ளது. பொறியியல் ஆலோசனைக் கம்பனிகள், கட்டுமான பொறியியல்,



இயந்திரவியல் பொறியியல், கடல் லோடப் பொறியியல் கம்பனிகளையும் ஏனைய தேவையுள்ள வளங்களை வினியோகிக்கத்தக்க நிறுவனங்களையும் தம்முடன் பதிந்து கொள்ளுமாறு ஸ்ரீ லங்கா கேட்வே இண்டஸ்ரீஸ் (தனியார்) கம்பனி கோரியுள்ளது.

ஸ்ரீ லங்கா கேட்வே இண்டஸ்ரீஸ் (தனியார்) கம்பனியானது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டு நிறுவனங்களை ஒன்றாக்கி உருவாக்கப்பட்ட கொத்தணி அமைப்பாகும். இவ் அமைப்பு சம்பூரில் விசேட அபிவிருத்தி என்னும் பெயரில் பாரிய தொழிற்றுறை அபிவிருத்தி

(பக்கம் 10)

### கட்டைப்பறிச்சானில் களவுபோகும் அலையாத்திகள்

மூதூர் கிழக்கு கட்டைப்பறிச்சான் கிராமத்தில் காணப்படும் அலையாத்தி மரங்களை தொடர்ச்சியாக களவாடிச் செல்லும் இனம் தெரியாத கும்பலொன்று இம்முறையும் உரிய அதிகாரிகளிடம் சிக்காமல் தப்பியோடி விட்டதாக மூதூர் செய்திகள் தெரிவிக்கின்றன.

(பக்கம் 10)

### வாக்களிக்கத் தெரியாத அரச அலுவலர்கள்

திருக்கோணமலை மாவட்ட தபால் மூலவாக்களிப்பு முடிவுகளின் படி 750 அரச அலுவலர்களின் வாக்குச்சீட்டுகள் நிராகரிக்கப்பட்டவையாக உள்ளன. அம்பாறை மாவட்டத்தில் அவை 575 ஆகவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் அவை 122 ஆகவும் உள்ளன.

(பக்கம் 10)

### அவுஸ்திரேலியப் பயணிகள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்

கடந்தமாதம் 20ம் திகதி புல்மோட்டைக் கடற்பரப்பில் கைதாகியிருந்த சுமார் 79 சட்டவிரோதப் பயணிகள் 03.09.2012ல் சரீரப் பிணையில் திருமலை மாவட்ட நீதவான் நீதிமன்றால் விடுவிக்கப்பட்டுள்ளனர். கைதாகிய முதலிரு

(பக்கம் 10)

### புதிய மகாணசபையாலாவது வீதி திருத்தப்படுமா? அங்கலாய்க்கும் மக்கள்!

மூதூர் மல்லிகைத்தீவு பிரதான வீதியானது பல வருடங்களாகப் பழுதடைந்திருந்தும் இதுவரை திருத்தப்படாமையினால் மக்கள் பல அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர். மூதூரிலிருந்து மட்டக்களப்பு செல்லும் வீதியிலிருந்து " மல்லிகைதீவு சந்தியிருந்து மணற்சேனை, பெரியவெளி, மல்லிகைத்தீவு மேன்காமம், தெகிவத்தை போன்ற கிராமங்களை ஊடறுத்துச் செல்லும் பிரதான வீதியே " குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. அத்துடன் மணற்சேனை பாடசாலை, பெரிய வெளி பாடசாலை, மல்லிகைத்தீவு மகாவித்தியாலயம், மேன்காமம் பாடசாலை, தெகிவத்தை சிங்கள வித்தியாலயம் முதலான பாடசாலைகளுக்கு செல்லும் பாதையாயாகவும் இவ்வீதியே அமைகிறது. இதனால் இப்பாதையை பயன்படுத்தும் மக்களும் மாணவ, மாணவிகளும் சொல்லெணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

(பக்கம் 10)

# திருக்கோணமலை மாவட்டத்தின் வேலையற்றிருக்கும் இளைஞர்களின் வீதம் 21

திருக்கோணமலை மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் 19 தொடக்கம் 25 வயதிற்கிடைப்பட்ட வயதுடைய இளைஞர்களில் சுமார் 20% மானவர்கள் வேலை வாய்ப்பற்றிருப்பதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வேலை வாய்ப்பற்றோர் வீதம் இலங்கையின் மொத்த சனத்தொகையின் அடிப்படையிலிருந்து பெறப் பட்டுள்ளது.




இலங்கையின் மொத்த சனத்தொகையான 2 மில்லியன் மக்களில் 19 தொடக்கம் 25 வயதிற்குட்பட்ட இளைஞர்களின் வேலை வாய்ப்பின்மை வீதம் 21% இருப்பதாகவும் 2009ம் ஆண்டிலிருந்து தற்போது வரை 2% தால் அதிகரித்திருப்பதாகவும் சிரேஷ்ட புள்ளி விபரவியலாளர் திரு. M. ரத்னாயக்காவை மேற்கோள்காட்டி தகவல் வெளியாகியுள்ளன.

(பக்கம் 10)

### நறுமணம் வீசும் உட்துறைமுகக் கடற்பரப்பு

சில தினங்களாக திருமலை உட்துறைமுகக் கடற்பரப்பில் சகிக்க முடியாத வெடுக்கு நாற்றம் வீசி வருகிறது. அப்பகுதி பிரதேச வாசிகளும், அவ்வீதியால் செல்லும் மக்களும் மணத்தை சுவாசிப்பதாகத் தெரிவிக்கின்றனர். பருவகால மாற்றத்திற்கமைய வருடத்தின் குறித்த காலத்தில் இவ்வாறான மணம் வீசுவது வழக்கம் என பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

### விக்நேஸ்வராவில் நாடகக் கலை நிகழ்ச்சி

இளைஞர் விவகார அமைச்சின் திருமலை மாவட்டத் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினதும், இளைஞர் கழக சம்மேளத்தினதும் ஏற்பாட்டின் பேரில் தேசிய மட்டத்தில் விருது பெற்ற சமூக இலக்கிய நாடகங்கள் "நாடகக்

(பக்கம் 10)

### தாமதமாகியது தேர்தல்ப் பணிச் செயற்பாடுகள்

தேர்தல்ப் பணிகளில் ஈடுபடும் அரச அலுவலர்களை 07.09.2012ல் காலை 6.30 மணிக்குச் சமூகமளித்துக் கடமைகளைப் பொறுப்பேற்குமாறு திருகோணமலைத் தேர்தல்ப் பணியகம் அறிவுறுத்தியிருந்த போதும் காலை 8.00 மணிவரை தேர்தல்ப்

(பக்கம் 10)

### பாதுகாக்கப்பட்ட புதைபொருளிடமாகப் பிரகடனம்

கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டத்தில், சேருநுவர பிரதேச செயலாளர் பிரிவின் தெகிவத்த கிராம சேவகர் பிரிவில் (கி.சே. பிரிவு இல. 217)) அமைந்துள்ள L. B. - 6 கொலனிய கிராமத்திற்குச் சொந்தமான சிறி வதன

(பக்கம் 10)

### தபால் பெட்டியின்றி தனித்து நிற்கும் கச்சேரி

திருக்கோணமலை மாவட்டக் கச்சேரி கடந்த வருட இறுதியில் பிரட்றிக் கோட்டையிலுருந்து 4ம் கட்டைப்பகுதிக்கு மாற்றப்பட்டது. ஆனால் இன்றுவரை கச்சேரியில் பகுதியொன்றாக இயங்கி வந்த தபாலகம் புதிய கட்டிடப் பகுதிக்கு மாற்றப்படவில்லை. இதனால்

(பக்கம் 10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு

159A, 2ஆவது மாடி, கடல் முக வீதி,
திருகோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

**வணக்கம் !**

ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம் நாம்..... யார் யாருடன் சேரப்போகின்றார்கள் என்று. அனைவருமே அனைவருடனும் சேர்ந்தே ஆட்சியமைக்கப் போவதாக கூறிக்கொள்கின்றார்கள். பேரம் பேசல்களின் நடுவே சோரம் போகாமலிருங்கள் என்று தலைவர்கள் தம் தொண்டர்களை வேண்டி நிற்பதைக் காணக் கூடியதாக உள்ளது. ஏனெனில் கொள்ளைப்பற்றும், தூர நோக்கும், இனவிடுதலைத் தீவிரமும், சுதந்திர வாழ்வும் இன்னும் எம் தமிழில் இயற்றக்கூடய அழகிய வார்த்தைகள் யாவும் ஐந்து கோடி பணத்தின் முன் சிலவேளைகளிற் செல்லரித்த காகிதமாய் விடுகின்றன. தொண்டர் களைத் தலைவர்கள் அடிக்கடி ஞாபகப்படுத்தத்தான் வேண்டும். அப்படித்தானே? அவர்களுக்கு நாம்

ஆயிரக்கணக்கான சம்பூர் மக்கள் இன்னும் அகதி முகாமினுள்ளும், கரடு முறடான பாறை நிலத்துண்டுகளிலும் காலங்களிக்க அரங்கேறவருகின்றது சம்பூர் அபிவிருத்தித் திட்டம். தடுக்கமுடியாத அளவிற்குப் போய்விட்ட இத்திட்டத்தினுள் எவ்வாறு நாம் எம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியும் என்பதே இனிச் சிந்திக்க வேண்டிய விடயமாகும். உண்மையில் தகவல்களின் அடிப்படையில் இலங்கையின் மிகப் பெரிய அபிவிருத்தித் திட்டமாக இவ் அபிவிருத்தித் திட்டமே உள்ளது. எனில் இவ் அபிவிருத்தித் திட்டமானது பெருமளவு நன்மைகளை இலங்கையருக்குத் தரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. எரிமலைக் குழம்பில் முதலில் புற்கள் எரிந்தாலும் பின் அம்மண் வளம்கூடிய மண்ணாக மாறிவிடுவதைப் போல் இவ் அபிவிருத்தியால் நாம் அகதிகளாக்கப்பட்டிருந்தாலும் அதிலிருந்து எவ்வாறு அவ் அகதிமக்கள் வளமடையப் போகின்றார்கள் என்பதைச் சிந்திக்க வேண்டியுள்ளது.

20,000 வேலைவாய்ப்புக்களை உருவாக்கவுள்ள இத் திட்டத்தில் அகதியாக்கப்பட்ட மக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்பதை நிலைநிறுத்த முயற்சிப்பதே இப்போது எம்முன் நிற்கின்ற கடமையாகும். அரசியல் தலைவர்கள் எப்போதும் போலவே கத்திக் கூப்பாடிடட்டும். ஆனால் அக்கூப்பாடுகளின் நிலையை நீங்கள் அறிவீர்கள் தானே. எனில் அறிவுள்ள சமூகம் தனது மூளையை உருட்டி புதிய வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டும். அவ்வழிகளின் ஊடாகவே அம்மக்கள் பயனடைய முடியும். ஏனெனில் நிலஅபகரிப்புக்குப் பெயர் அபிவிருத்தியென்றாகிப் போனதும், அதனை எமக்குத் தீர்வைத்தரும் என நம்பும் நாடே முதலிட்டு நடத்த முயற்சிப்பதும் ஒன்றும் திரைமறைவில் இல்லையே. சிந்திப்போம்... என்ன செய்யவேண்டுமென்று.... சிந்திப்போமா?

-ஆசிரியர்-





கிழக்கு மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் நிலைப்பாடு பற்றியும் அவர்களின் எதிர்கால நடவடிக்கைகள் பற்றியும் ஊடகவியலாளர்களுக்கு விளக்கம் அளிக்கும் விசேட கூட்டம் 09.09.2012 மாலை கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் திருமலை இல்லத்தில் நடைபெற்றது. இரா. சம்பந்தன் ஊடகவியலாளர்களுக்கு விளக்கம் அளிப்பதையும் அவரது அருகில் மாவை. சேனாதிராஜா, சுமத்திரன், துரைரெட்ணசிங்கம் ஆகியோர் அமர்ந்து இருப்பதையும். தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் திருமலையில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பல்கலைக்கழக மாணவன் ஜனார்த்தனன் திருமலை நகரசபைத் தலைவர் க. செல்வராஜாவுடன் அமர்ந்து இருப்பதையும் கலந்து கொண்ட ஊடகவியலாளர்களையும் படங்களில் காணலாம்.

படங்கள் - அ. அச்சுதன்

## வெளிநாட்டு மோகத்தால் ஏமாந்த மக்கள்

பஹ்ரைனிலிருந்து அந்நாட்டின் முக்கியமான கம்பனி ஒன்றின் முகவராகத் தான் தொழிற்படுவதாகக் கூறி இலக்கையின் கிராமப் புறங்களுக்குள் நுழைந்துள்ள நபரொருவர் பெருமளவு பணத்தைச் சுருட்டிக் கொண்டு தலைமறைவாகி உள்ளார். அவர் "அல் - மைடன் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்" நிறுவனத்தின் பெயரை பயன்படுத்தி உள்ளதாக அந் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்படுகிறது. மேலும் அச்செய்திக்குறிப்பில் அந்நபரின் பெயர் "றியால் சாமுல் ஹமீட் பாருக் ஷைப்" என்றும் அவரது கடவுச்சீட்டின் இலக்கம் N4202582 ஆகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐப்பசி ஆறாம் திகதி வடமாகண கலை இலக்கிய விழா

வட மாகாணத்தின் 2012ன் கலை இலக்கிய விழா வடமராட்சியின் கரவெட்டி பிரதேசத்தில் அடுத்த மாதம் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.


அன்றைய நிகழ்வில் 2011ம் ஆண்டு வெளிவந்த நூல்களுக்கான பரிசில்கள் வழங்கப்படுவதோடு ஆய்வரங்குகளும், கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்நிகழ்வில் 2011 ஆண்டுக்கான ஆளுனர் விருதும் வழங்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. அடுத்த மாதம் ஆறாம் திகதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

## ஸ்ரீலட்சுமி நாராயணப் பெருமானின் முதலாவது வருசாபிசேகம்

திருக்கோணமலை 6ம் கட்டையில் வந்தமர்ந்துள்ள ஸ்ரீ லட்சுமி நாராயணப் பெருமாள் தேவஸ்த்தான முதலாவது வருட அபிசேகம் 16ம் திகதி ஞாயிற்றுக்கிழமையான இன்று நடைபெறுகின்றது. காலை 7 மணிமுதல் 8.30 வரையான சுபயோக வேளையில் வருசாபிசேகத்தைத் தொடர்ந்து திருக்கல்யாணமும் அன்னதானமும் இடம்பெறும். மாலை வெளி வீதி உற்சவம் நடைபெறும்.

## தரிப்பிடமின்றித் தவிக்கும் வாகனங்கள்



திருக்கோணமலை மாவட்ட பொது வைத்தியசாலையில் வாகனங்கள் நிறுத்துமிட வசதியின்மையால் வைத்திய சாலைக்கு வரும் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

தற்போது திறந்து வைக்கப்பட்டுள்ள புதிய வைத்தியசாலைக் கட்டிடத் தொகுதிப் பகுதியிலேயே முன்பு வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இதற்கு கட்டணமும் அறவிடப்பட்டது. தற்போது புதிய கட்டிடத் தொகுதி திறந்து வைக்கப்பட்டுள்ளதை அடுத்து வாகனங்கள் நிறுத்துமிடம் இல்லாது போனமையால் வைத்திய சாலைக்கு வரும் பொது மக்கள் தமது வாகனங்களை வைத்தியசாலைக்கு முன்னுள்ள வீதி ஓரங்களில் நிறுத்தி வைப்பதை காணக்கூடியதாக உள்ளது. மேலும் வாகனங்கள் நிறுத்த தடை செய்யப்பட்டுள்ள பகுதிகளிலேயே வாகனங்கள் நிறுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அழகிய திருமலை



கடல்முக வீதியும் உட்துறைமுக வீதியும் இணையும் பகுதியில் உள்ள கழிவு நீர் செல்லும் கான் குப்பை கூழங்களால் அடைத்துக் காணப்படுகின்றது. இதனால் அப்பகுதியில் கழிவு நீர் தேங்கி நிற்பதுடன் துர்நாற்றமும் வீசுகிறது. அதற்குரிய சுத்தப்படுத்தும் நடவடிக்கைகளை சுத்தப்படுத்தும் ஊழியர்கள் இதுவரை மேற்கொள்ளாததால் அப்பிரதேச வாசிகள் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதுடன் இவ்விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனமெடுத்து விரைந்து தீர்வை பெற்றுத்தருமாறும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## கட்டைப்பறிச்சானில் மினி சூறாவழி

கடந்த 2012.09.07 ஆந் திகதியன்று மாலை வேளை திடீரென கட்டைபறிச்சான் பிரதேசத்தை ஊடறுத்த மினிச் சூறாவழியால் சந்தணவெட்டு, அம்மன்நகர், கணேசபுரம், கட்டைபறிச்சான் வடக்கு, தெற்கு, சாலையூர், சேனையூர், கடற்கரைச்சேனை, சந்தோசபுரம் ஆகிய கிராமங்களின் தற்காலிகக் கொட்டில்கள் பாரிய சேதத்துக்குள்ளாகியது.


கடந்த 2006 அசாதாரண சூழ்நிலையினால் இடம்பெயர்ந்து மீளக்குடியேறிய மக்களில் பலர் அரைநிரந்தர வீடுகளிலும், தற்காலிகக் கொட்டில்களிலும் வசித்துவந்தனர். இதுவரை இவர்களுக்கான நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப் படாதநிலையில் மினிச் சூறாவழியால் தற்காலிய வாழ்விடங்களும் அழிக்கப்பட்டுள்ளன.

உரிய காலத்தில் மழை கிடைக்கவில்லையே என்று வானம்பார்த்து வாடிக்கொண்டிருந்த மக்களின் வாழ்வில் இம் மினிச் சூறாவளி பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சந்தணவெட்டு

(பக்கம் 10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொட்டியாரம் வரலாற்று அறிமுகம்



**பேராசிரியர் பால சுகுமார்**

இவ்வரலாற்றுக் குறிப்புக்களில் முஸ்லிம்கள் பற்றிய குறிப்புக்கள் இடம்பெறவில்லை. அது தனியாக பார்க்கப்படவேண்டிய விடயம். இங்கு நான் குறிப்பிடும் தகவல் என் அறிவுக்கு எட்டிய வரையில் தொகுக்கப்பட்டுள்ளன. மேலும், ஈழத்தில் புராதன வரலாற்று சான்றுகள் நிறைந்த இடங்களில் கொட்டியார பிரதேசமும் முக்கியம் பெறுகிறது.. இங்கு கிடைக்கப்பெற்ற கல்வெட்டுக்கள், சாசனங்கள், இலக்கியங்கள், செப்பேடுகள், பழைய கட்டிட இடிபாடுகள், தொல்மரபுக் கதைகளும் பாடல்களும் இப்பிரதேசத்தின் வரலாற்றை வெளிப்படுத்துகின்றன.

கிறிஸ்துவுக்கு முற்பட்ட சான்றுகள் பல்லாயிரம் வருடங்களுக்கு முன் பழம் தொல்குடி இடப் பெயர்வுகளுக்கென இப்பிரதேசத்தில் உள்ள துறைமுகங்களான இலக்கந்தை, இலந்தத்துறை, வெருகல் ஆகியவை பயன்படுத்தப் பட்டமைக்கான சான்றுகள் உள்ளன. வெருகல் பிரதேசத்தில் கண்டெடுக்கப் பட்ட முதுமக்கள் தாழி கிறிஸ்துவுக்கு முற்பட்ட கால மனித நாகரீகத்தை சுட்டி நிற்கிறது. அத்தோடு கறுப்பு, சிவப்பு மட்பாண்ட அழிபாடுகள் தொல்பழங்கால மரபை சுட்டி நிற்கின்றன.

கிறிஸ்துவுக்கு முன் உள்ள சான்றுகளில் மிக முக்கியமான இரண்டு கல்வெட்டுக்கள் இங்கு நம் கவனத்தை ஈர்க்கின்றன. சேனையூர் கட்டைபறிச்சான் பகுதியில் பள்ளிக்குடியிருப்பு செல்லும் வழியில் அமைந்திருக்கும் கச்சக்கொடி மலையில் காணப்படும் ஒரு கல்வெட்டு தமிழ் பிராமி சாசனமாக உள்ளது. அச் சாசனமானது பருமகதிசபுதலெனே என வரையப்பட்டுள்ளது. இதன் வாசகமாக சகச சங்கமய என்பது கொள்ளத்தக்கது. இந்த எழுத்துக்களில் 'ம' தமிழ் பிராமிக்குரியதாக உள்ளது. இதனை படியெடுத்து வாசித்த தொல்லியல் துறை பேராசிரியர் க.இந்திரபாலா இக் கல்வெட்டு கி.மு இரண்டாம் நூற்றாண்டை சேர்ந்தது என உறுதிப்படுத்தினார். இதே சாயலிலேயே வெருகல் சித்திரவேலாயுத கோயிலுக்கு பக்கத்தில் உள்ள ஒரு குன்றில் ஒரு கல்வெட்டு காணப்படுகிறது. இதே வாசகங்களே அதிலும் பொறிக்கப்பட்டுள்ளன. இதுவும் இப்பிரதேசத்தின் முன்னோர்களின் வாழ்வையும் வரலாற்றையும் உறுதிப்படுத்துகிறது.

இலக்கந்தை வேப்பங்குளம் பகுதியில் கூட்டமாக காணப்படும் நடுகற்கள், ஈச்சலம்பற்றைப் பகுதியில் உள்ள கல்வெட்டுக்கள், சீனம்வெளியில் கண்டெடுக்கப்பட்ட சில கல்வெட்டுக்கள் இப்பிரதேசத்தில் தமிழர்களின் தொல் வரலாற்றை மேலும் உறுதிப்படுத்துகின்றன.

எல்லாளன் பற்றி வழக்கிலுள்ள கதை, மரபு சார் நம்பிக்கைகள் போன்றவற்றின் அடிப்படையில் ஈச்சலம்பற்றை செம்பொன்னாச்சி அம்மன் சிலையை எல்லாளன் கொண்டுவந்தான் என்ற கூற்றுடன் எல்லாளன் இலங்கைத்துறையில் இறங்கி ஈச்சலம்பற்று வழியாக பள்ளிகுடியிருப்பு வந்து சேனையூரைக் கடந்து மல்லிகைத்தீவு மணலாறு வழியாக பொலனறுவையை அடைந்து அனுராதபுரம் சென்றதாக அந்தக்கதை நீழ்கிறது.

இப்பிரதேசத்தின் இளக்கந்தை, நல்லூர், வாழைத்தோட்டம், வெருகல், சாலையூர் முதலான பிரதேசங்களில் காணப்படுகின்ற பூர்வ குடிமக்களின் தொடர்ச்சியான இருப்பெனபது இப்பிரதேச வரலாற்றில் அதன் பழமையை மேலும் சான்று பகிர்கிறது. கிறிஸ்துவுக்கு பிற்பட்ட கால சான்றுகள் -

பரந்த காடுகளையும், வயல்களையும், மேச்சல் நிலங்களையும் கொண்டிருக்கும் இந்த பிரதேசம் தொடர்ச்சியான நகர்வுகளின் மூலம் மக்கள் இடம் மாறி வாழ்ந்திருக்கிறார்கள் போலக் காட்டுகிறது. குடி நகர்வுகள் மாறி மாறி இடம்பெற்றிருக்கின்றன. இன்னமும் பாழடைந்த நிலையிலேயே காணப்படுகின்ற நூற்றுக்கணக்கான குளங்களும் அதை அடியொற்றிக் காணப்படுகின்ற மக்கள் வாழ்ந்ததற்கான தடயங்களும் குடியிருப்புக்கள் இருந்ததற்கான சான்றாதாரங்களாய் உள்ளன. உலகம் முழுவதும் மனித நாகரீகத்தின் வரலாற்றில் குடி நகர்வுகளின் சிதைவுகளாக இத்தகைய ஆதாரங்களே தொல்வரலாற்றை உறுதிப்படுத்துகின்றன. ஆபிரிக்க, லத்தீன், அமெரிக்க நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளுக்கு இந்த வகையிலான ஆதாரங்களே பெரிதும் பயன்பட்டன.

இளக்கந்தக்குளப் பகுதியில் காணப்படுகின்ற அகலமான செங்கற்களால் கட்டப்பட்ட கட்டிடதொகுதியின் அழிபாடுகள், சமிளங்குடாப் பகுதியில் தென்படும் சான்றுகள், சோலைப் பள்ளத்தில் கிடைக்கக்கூடிய மட்பாண்டங்கள், பெண்டுகள் சேனையில் காணப்படுகின்ற அழிபாடுகள், உலவியா குளமும் அதன் சுற்றாடல்களும், அதனோடிணைந்த உலாவியன் எனப்படும் மன்னன் பற்றிய செய்திகள், அரியமான் கேணியிலே காணப்படுகின்ற பழைய மக்கள் குடியிருப்புக்கான தடயங்கள் என அனைத்தும் இப்பிரதேசத்தின் வரலாற்றின் தொடர்ச்சியை உறுதிப்படுத்துகின்றன. -தொடரும் -

# பிஞ்சு முரசு

## முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

ரூட்டிக்கறை

ஹா... ஹா...ஹா என்ற சிங்கராஜாவின் குரல் காடு முழுவதும் பரவியது. மிருகங்கள் அந்தக்குரலுக்கு பயப்படவில்லை. சந்தோஷப்பட்டன. ஏன் அது காட்டை காக்கும் சிங்கராஜாவின் குரலாயிற்றே. ஆம் சிங்கராஜாவின் ஆட்சி எவ்வளவு சிறப்பானது. கீச்... கீச்... என பாடிப்பறந்து திரியும் குருவியும் ஸ்... ஸ்... என சீறும் கொல்லும் விசமுள்ள பாம்பும் நண்பர்களாக இருந்த ஆட்சி அது.

அந்த காட்டில்தான் வசித்தது ஓர் நரி. அதற்கு சிங்கராஜாவின் கர்ச்சனைக்கு பயமில்லை. அதனால் அதனை வீழ்த்த நினைத்தது. முடியுமா...? சிங்காராஜாவின் கர்சனைக்கு பயப்படாத அந்த நரி அதன் பலத்தை எண்ணி பயந்தது, சிங்கராஜாவை வீழ்த்த என்ன செய்வது...? சிங்கராஜாவை எவ்வாறு ஏமாற்றமுடியும்...? காலம் வரும் வரை பொறுமையாக இருப்போம் என எண்ணியது நரி

அந்த காலமும் வந்தது. ஒருநாள் சிங்கராஜா வேட்டைக்கு சென்று வரும்போது பலத்த காயங்களுடன் வந்தது. இதுதான் சிங்கராஜாவை ஏமாற்ற சரியான நேரம் என எண்ணியது. சிங்கராஜாவிடம் சென்று ராஜா, ராஜா இது என்ன? உடல் முழுவதும் இவ்வாறு காயமேற்பட்டுள்ளதே... என்ன செய்வது? ... ஆ ... எனக்கு தெரிந்த மருத்துவர் ஒருவர் அந்த மலையில் இருக்கிறார். அவரிடம் சென்றால் குணமாகும். வாருங்களேன் ராஜா..." என்று அழைத்தது. சிங்கராஜாவுக்கு உயிர் போகும் வலி. என்னசெய்வது உடல் வலி குணமாக வேண்டுமே, நரியுடன் போக சம்மதம் தெரிவித்தது.

தனது திட்டம் நிறைவேறப் போவதை எண்ணி மனதுக்குள் மகிழ்ச்சியடைந்தது நரி. சிங்கராஜாவை மலையின் உச்சியிலுள்ள ஒரு பள்ளத்திற்கு அழைத்துச்சென்றது. நடக்க கூட முடியாத நிலையில் அந்த பள்ளத்தினுள் மெதுவாக இறங்கினார் ராஜா. இது தான் சமயம் என எண்ணியது நரி. சிங்கம் எதிர்பாராத நேரத்தில் திடீரென ராஜாவை பள்ளத்தாக்கிலிருந்து தள்ளிவிட்டது. பாவம் சிங்கராஜா அப்போதுதான் ராஜாவுக்கு நரியின் தந்திரம் தெரிந்தது. என்ன செய்வது? ராஜா சிலநொடிகளில் மலையடிவாரத்தில் இறந்து இடந்தது. இதைக்கண்ட நரிக்கு சந்தோஷம் தாங்கமுடியவில்லை. மகிழ்ச்சியால் ஊளையிட்டது. இந்த அலறல் காடு முழுவதும் பரவிற்று. காட்டு மிருகங்கள் அந்த சத்தம் வந்த இடத்தை நோக்கி வரத்தொடங்கின. நரி இதை கண்டது. உடனே மலையிலிருந்து இறங்கி ராஜாவின் உடலின் அருகில் வந்து அழதொடங்கியது.

இதனை கண்ட மிருகங்கள் நரியிடம் நடந்ததை விசாரித்தன. நரியோ "ராஜா மலையிலிருந்து விழுந்து தற்கொலை செய்துவிட்டார். உயிர் போகும் போது என்னை இக்காட்டை ஆளும்படி சொன்னார்" என்றது. பாவம் மிருகங்கள் நரி சொன்னதை நம்பின. நரியை ராஜாவாக்கின.

புத்திசாலியான யானை ஒன்று இதனை நம்பவில்லை. நரி ஏதோ சூழ்ச்சி செய்வதாக எண்ணியது. தான் நினைத்தது நடந்ததை எண்ணி மகிழ்ச்சியடைந்த நரிக்கு ஆணவம் தலைக்கேறியது. முறையற்ற ஆட்சி நடத்தியது. இதனால் காட்டில் கலவரம் நடந்தது.

புத்திசாலி யானைக்கு நரியின் தந்திரம் விளங்கிற்று உடனே காட்டு மிருகங்களை ஒற்றுமைப்படுத்த முயன்றது. அதில் வெற்றியும் கண்டது. யானையின் தலைமையில் காட்டு மிருகங்கள் ஒன்று சேர்ந்தன. நரியை காட்டை விட்டே விரட்டியடித்தது. காட்டை விட்டு ஊருக்குள் போனது நரி.

அங்கு ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த இடையன் நரியை கண்டான். ஆடுகளை நரி உண்ண வருவதாக எண்ணி நரியை தடியாலே அடித்தான் பாவம் நரி அடிவாங்கியே இறந்தது. தினை விதைத்தவன் தினை அறுப்பான் வினை விதைத்தவன் வினையறுப்பான், இதுவே இறைவனின் தீர்ப்பு என இறக்கும் தருணத்திலேயே நரிக்கு தெரிந்தது.


- யசோதினி -

**இலங்கையின் தேசிய முக்கியத்துவம்**

1. தேசிய மரம் - நாகமரம்
2. தேசிய மலர் - நீலோற்பலம்
3. தேசிய பறவை - தீக்கோழி
4. தேசிய மிருகம் - மர அணில்
5. தேசிய விளையாட்டு - கரப்பந்தாட்டம்.

**பறவைகள் அடைகாக்கும் காலம்**

| | |
|---|---|
| கோழி | - 21நாட்கள் |
| வான்கோழி | - 25நாட்கள் |
| தீக்கோழி | - 28-34நாட்கள் |
| காடைக்கோழி | - 17 நாட்கள் |
| புறா | - 17 நாட்கள் |
| தாரா | - 28 நாட்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபவங்களின் வெண்கூடு அல்லது ஆசிரியர்களுக்கு நன்றி

சென்றவார தொடர்ச்சி

சவிரிமுத்து மாஸ்ரருக்கு மாத்திரமல்ல ஆசிரியர்கள் அனைவருக்கும் நான் யார் என்பது பகிரங்கமானவுடன் புறக்கணிப்பு ஆரம்பமாகியது. எனது மேசைகுடையப்பட்டது எனது புத்தகங்களுடன் 'அம்புலிமாமா' புத்தகம் ஒன்று சவிரிமுத்து மாஸ்டரிடம் சிக்கிவிட பிரம்பு விலாசல் கிடைத்தது. அதுமட்டுமல்ல மற்ஸ் பாட நேரம் நான் வகுப்பில் இருக்க அனுமதிக்கப்படவில்லை... 6ம், 7ம், 8ம் ஆண்டு வரை கணிதபாட நேரம் நான் வெளியில் நிறுத்தப்பட்டேன்.

நெல்லி மரப்பள்ளிக் கூடத்தில் பஞ்சாட்சரவாத்தியார், திரு இருதயக் கல்லூரியில் சவிரிமுத்து மாஸ்ரர். நான் மற்ஸ்சில் பின் தங்கி விட்டேன்.... பின் தள்ளப்பட்டேன். 93 மாக்ஸ் எடுத்த எனக்கு அந்தப்பாடம் ஏனோ எட்டாமலே போய்விட்டது. அவர்களது திட்டம் நிறைவேற்றப்பட்டது.

ரியூசன் இல்லாத காலம், G,C,E (O/L) ல் நான் சயன்ஸ் பாடத்துடன் எண்கணிதம் எழுதினேன் சுயமுயற்சியும் பழைய வினாத்தாள்களின் உதவியுடனும் நான் எண்கணிதம், தமிழ் உட்பட எட்டுப்பாடங்களை எடுத்தேன். 5C யும், 3S ம் கிடைத்தது.

அதனால் கிளறிக்கல் சோதனை எழுதும் தகுதியும் கிட்டியது. என்னை நான் உணர்ந்து கொண்டேன். அவர்களது அந்த திட்டமிட்ட நடவடிக்கைகளின் தாற்பரியம், நான் கம்யூனிச இயக்கத்தாக்கத்தின் பால் ஈர்ப்புற உதவிற்று.

நண்பர்களே யாருக்கும் கிட்டாத மிகப்பெரிய கொடுமைகளைச் சிறுவயதில் அனுபவித்துள்ளேன். இந்த அனுபவங்களே என்னைப் புடமிட்டன.. இன்னும் புடமிடுகின்றன. அந்த ஆசிரியர்களே! உங்களுக்கு எனது மனம் நிறைந்த நன்றிகளைக் கூறிக் கொள்கின்றேன். அந்த நேரத்தில் கூட அதாவது O/L காலத்தில் கூட நான் டானியலைப் படிக்கவில்லை.



-நந்தினி சேவியர்-

எனது அண்ணர் வாங்கி வந்த இரு புத்தங்கள் என் கண்ணில் சிக்கியது. இரண்டும் இந்தியாவில் பதிப்பிக்கப்பட்ட (பாரி நிலையம் - சரஸ்வதி பதிப்பகம்) "ஒரே இனம்" எனும் செ.கணேசலிங்கனின் சிறுகதைத் தொகுப்பு. "தீ" என்னும் எஸ்.பொவின் நாவலும். இவை இரண்டுமே நான் முதன்முதல் வாசித்த இலங்கை எழுத்தாளர்களின் நூல்களாகும்.

1964ம் ஆண்டுக் காலகட்டம் என நினைக்கின்றேன். சனி ஞாயிறு விடுமுறைகள் மாற்றப்பட்டு போயா தினம், போயாவுக்கு முன்தினம் என விடுமுறை விடப்பட்ட காலம். கொஞ்சங் கொஞ்சமாக இலங்கை எழுத்துக்களின் பரிச்சயம் எனக்கு ஏற்படத் தொடங்குகிறது. உண்மையைச் சொல்கிறேன் இன்னமும் நான் டானியலை வாசிக்கத் தொடங்கவில்லை. அவரது டானியல் கதைகள் சிறுகதைத் தொகுப்பு வெளிவந்திருந்தது.

எனது அண்ணரின் மனைவியின் வீட்டில் அதனை நான் பார்த்தேன். முறிந்த ரோசாவின் படம் போட்ட சிவப்பு நிறப் புத்தகம். எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகத்தின் முதல் வெளியீடு. கலாநிதி சு.வித்தியானந்தன் முன்னுரை. விலை ரூபா 2.50 சதம். அந்தத் தொகுப்பைப் பார்த்தேன் ஆனால் வாசிக்க முனையவில்லை. என்னிடம் அண்ணரினால் வாங்கப்படும் குமுதங்கள், பேசும்படம், கரீமை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் "தமிழ்ச்சினிமா" என்பன வாசிப்பதற்காக கை வசமிருக்க அத் தொகுப்பை வாசிக்க முடியாதிருந்தேன்.

நெல்லியடி லக்சுமி ஸ்ரோசின் முன்னரங்க விற்பனைப் புத்தகங்கள் என்னை இறுகக் கட்டிப் போட்டிருந்தன. சந்திரோதயம் எனும் கையெழுத்துச் சஞ்சிகையை நண்பனும் மைத்துனனுமான எட்வேட்டின் துணையுடன் ஆரம்பித்தேன். யூரியன் புஸ்பராசா அப்போது எமது கல்லூரியின் மாணவன்.எனது முதல மண்வாசனைக் கதை "சுடலை ஞானம்" அதில் அரங்கேறியது.எட்வேட் ஒரு அழகிய படம் கீறியிருந்தான்.அந்தக் கதை புஸ்பராசனினால் சம்பத்தில் கூட பிரஸ்தாபிக்கப்பட்டது. அதனை நான் அச்சேற்ற சந்தர்ப்பம் வாய்க்கவில்லை இன்று வரை வாய்க்கவே இல்லை./

## போதையின் மிகுதியால் வீதியில் புரண்ட சாரதி



திருக்கோணமலையிலிருந்து வவுனியாவிற்குச் செல்கின்ற A12 பிரதான வீதியில் மோட்டார் வண்டிச் சாரதி ஒருவர் தன் சாகச விளையாட்டை காட்ட முயன்றபோது விபத்தை எதிர் கொண்டார். இவர் மதுபோதையில் மோட்டார் வண்டியை செலுத்தியதுடன் போதை மயக்கத்தில் இருகைகளையும் விட்டு விட்டு பெண்ணொருவருக்கு சாகசங்கள் காட்ட முயன்ற போது மோட்டார் சைக்களுடன் விழுந்து பலத்த காயங்களை எதிர் கொண்டதாக விபத்தினை நேரில் கண்டவர் தெரிவித்தார். விபத்துக்குள்ளான நபரின் முகத்தில் பலத்தகாயங்கள் ஏற்பட்டு இருந்ததுடன் இரத்த வெள்ளத்தில் வீதியிற் கிடந்தமையை அவதானிக்க முடிந்தது.

அறிவித்தல்கள்

### வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு பயணிகள் போக்குவரத்து வாகனங்கள் வாடகைக்கு தேவை

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களுக்கும் பயணிகள் போக்குவரத்திற்கான கார், ஜீப், வான், பிக்கப் ஆகிய வாகனங்கள் வாடகைக்குத் தேவைப்படுகின்றன.

இதற்கான படிவங்களை செப்டெம்பர் 3 தொடக்கம் 21ம் திகதிக்கு முன் "செத்சிரிபாய" இல் அமைந்திருக்கும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் பெற்றுக்கொள்ள முடியும்.

# "திருமலை எழுத்தாளர்கள் ஒற்றுமையாய் செயற்பட வேண்டும்"

சென்ற வார தொடர்ச்சி



சீ.என்..துரைராஜா

கேள்வி :- எழுத்துறை சார்பாக உங்கள் குடும்பத்தினரின் பங்களிப்பு எவ்வாறமைந்தது?

பதில் :- என் இலக்கியப் பங்களிப்பிற்கு என் குடும்பத்தாரின் ஒத்துமைப்பு மிக சிறப்பாகவே இருந்தது. என் பிள்ளைகளும் எழுத்து துறையில் மிகுந்த ஆர்வம் உடையவர்களாக உள்ளனர். என் மகனான குணராஜா மற்றும் மகளான ஜெந்தி ஆகியோரும் கவிதை முதலியவற்றை எழுதுகின்றனர். அவர்களின் இலக்கிய சேவைக்கு என்னாலியன்ற பங்களிப்பையும் செய்து வருகிறேன்.

கேள்வி :- இலக்கிய வாழ்விலே உங்களால் மறக்க முடியாத சம்பவம் ஒன்று?

பதில் :- இலங்கையில் போர்ச் சூழல் நிலவிய காலப்பகுதியிலே நான் அகதியாக இந்தியாவிற்கு சென்றிருந்தேன். அங்கு ஈழத்து அகதிகள் பெரும் இன்னல்களை அனுபவித்து வந்தனர். மிகவும் பரிதாப நிலையை எதிர் கொண்டனர். அப்போது அகதிகளின் துன்பங்களை எடுத்துரைத்தும் அகதிகளை மீண்டும் தாய் நாட்டிற்கோ அல்லது வேறொரு அகதிகளை ஏற்கும் நாட்டிற்கோ அனுப்பக்கோரி 1992ம் ஆண்டு தாரமங்கலம் எனுமிடத்திலிருந்து இந்தியப்பத்திரிகை ஒன்றிற்கு கடிதம் ஒன்றை எழுதினேன். அது அப்பத்திரிகையில் வந்த என் கடிதத்தை வாசித்த கலைஞர். மு.கருணாநிதி அவர்கள் "துழைக்கிறது நெஞ்சை துரைராசாவின் கடிதம்" எனும் தலைப்பில் பதில் கடிதம் ஒன்றை பத்திரிகையில் எழுதினார்.

அது என்னால் மறக்க முடியாத ஒரு சம்பவமாக உள்ளது.

கேள்வி :- திருமலையில் இன்றைய இளந்தலை முறையினரின் இலக்கிய பங்களிப்புக்கள் பற்றிய உங்கள் கருத்து என்ன?

பதில் :- இன்றைய இளந்தலைமுறையினரின் பங்களிப்பு திருமலையில் சிறப்பாக இருப்பதை கண்டு மிக, மகிழ்ச்சி அடைகிறேன். மூத்த எழுத்தாளர் களிடையேயும் சரி அரசியல்வாதிகள் மத்தியிலும் சரி ஒற்றுமையின்மையை அவதானிக்க முடிகிறது. அவ்வாறின்றி இளந்தலை முறையினர் ஒற்றுமை யாக செயற்பட வேண்டும். என்பது என் எதிர்பார்ப்பு அவ்வாறு செயற்படும் போதுதான் அவர்கள் ஆரோக்கியமான கருத்துக்களை சமூகத்திற்கு வெளிப்படுத்தமுடியும். இளம் எழுத்தாளர்கள் சமூக சீர்திருத்தம், தமிழரின் இன்னர்கள் என்பவற்றையும் பல புதுமையான கருத்துகளையும் வெளிப்படுத்த வேண்டும்.

புதுக்கவிதையை மட்டுமன்றி மரபு கவிதைகளையும் எழுத வேண்டும்.

இவ்வாறு தன் கருத்துக்களையும் மன உணர்வுகளையும் வெளிப்படுத்திய கவிஞர். சீ.என். துரைராசா அவர்கள் தான் 1990ம் ஆண்டிற்கு முன் எழுதிய படைப்புகள் இனப்பிரச்சனையின் போது அழிந்து விட்டதாகவும் கவலை தெரிவித்தார். 1990ம் ஆண்டின் பின் எழுதிய கவிதை, கட்டுரைகளை வெளியிட தன்னிடம் போதிய பொருளாதார வசதி இல்லாதிருப்பதுடன் யாரேனும் உதவி செய்யுமிடத்து அவற்றை நூலுருவாக்க காத்திருப்பதாகவும் கூறினார். அவரின் தொடர்பிற்கு (0262050517)

-பத்மன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரங்கு

## பயணத்தின் ஆரம்பம்

வாசகர்களுக்கு வணக்கம், அரங்கு என்ற புதிய பகுதியினூடாக உங்களை நானும், என்னை நீங்களும் தரிசித்துக்கொள்ளும் ஆரம்பம் இது. நீங்களும் நானும் என்பது தான் சமூகம். ஆகவே இதை பண்பாட்டிலிருந்து கிளர்ந்தெழும் ஒரு சமூக தரிசிப்பாகவே உணர்ந்து இப்பகுதியில் கரம் கோர்ப்போம்.

"அரங்கு" என்ற சொல் பல துறைப்பட்ட செயல்களுடன் இணைகின்றது. உதாரணமாக, அரசியல் அரங்கு, சமூக அரங்கு, கருத்தாடல் அரங்கு; நாடக அரங்கு என ஒவ்வொருவர் தேவைக்கும் அது பயன்படுகின்றது. மலைமுரசின் இந்த அரங்கு ஒரு பண்பாட்டரங்காக செயற்பட எத்தனிக்கின்றது. பண்பாடு அவற்றையெல்லாம் இவ்வரங்கு பேசும்.

இன்றைய உலக இயங்குதலின் அடிப்படையில் அரசியல், பொருளாதாரம், சமூக நிலைமைகளோடு எமது சமூகத்தினை இணைப்பது எந்த வகையில் நியாயமானது? என்ற கேள்விக்கு இடமளிக்காத வகையில் சீரிய சிந்தனையுடனும் இலட்சிய பற்றுறுதியுடனும் சவால்களுடனும் பயணிக்க வேண்டிய தேவையும் உள்ளது. கனவுகள், இலட்சியங்கள், பண்பாடு, சிந்தனை எல்லாமே முள்ளுக் கம்பிகளில் சிக்கி பழுப்படைந்த கிளிஞ்சல் துணிகளாக காற்றில் நிலை தளர்ந்து, அவற்றைத் தேடுவதற்கும், கற்பதற்கும், தள்ளாடும் நிலையில் நாம் தள்ளப்பட்டிருக்கின்றோம் என்பதை நினைக்கும் போது மனதில் ஒரு வலியும் ஏற்படுகின்றது.

இப்படியான சமூகப் போக்கில் போராடும் போது தான், நாம் ஏந்திக்கொள்ள வேண்டிய ஆயுதம் வலுவானதாக இருக்க வேண்டும். ஏந்துவோர்கள் சரியானவர்களாகவும் இருக்கவேண்டும். அவ்வாயுதம் செழுமை மிக்க அறிவாயுதமாக இருக்க வேண்டும். அவ்வாறே இவ் "அரங்கு"ம் அறிவு, கலை, பண்பாடு என்ற தளத்தில் இருந்து தனக்கான ஆயுதத்தை பற்றிக்கொள்ள நினைக்கிறது.

கலையை கையாள்வதன் மூலம் கருத்தியலை வளர்ப்பது என்ற சிந்தனையைக் கலைஞர்களால் மட்டுமே சாதிக்க முடிந்த ஒன்று. கருத்தினை பரப்புரை செய்வது என்பது ஒரு வகை பிரச்சாரம். இதற்கு கலை பயன்படும் போது அதனை வேறு தளத்தில் நின்று நமக்கு தேவையானவற்றை ஏன் சாதமாக்கிக் கொள்ள முடியாது? கலை, பண்பாடு என்பன எல்லாம் மக்களுடன் அந்நியப்பட்டு நிற்க விரும்புவதில்லை, அது அவர்களின் பேசு பொருளாகவே அமைகின்றது. இது இவ்வாறு இருக்க இன்று முன் வைக்கப்படும் ஒரு கருத்து, இன்றைய இளைஞர்கள், யுவதிகள் தலைமுறையினர், கலைகளை பயில்வதில்லை, மதிப்பதில்லை, பயன்படுத்துவதில்லை எனப் பலவாறு கூறுவதற்கு எனக்கு துணிவு இல்லை என்பது உண்மை.

அவர்கள் தேடுவதற்கும், கற்பதற்கும், கலையை சரியாக பயன்படுத்துவதற்கும் எத்தனை முன்னோடிகள் தங்கள் வாசல்களையும் சாளரங்களையும் திறந்து வைத்துள்ளீர்கள் என சிலர் பேசுவதும் காதில் உரசிப் போகின்றது. இது பற்றி தனியொரு பகுதியில் அலசி ஆராய்வதே பொருத்தமானது என நினைக்கின்றேன். எனவே கலை பற்றிய தேடுதலுக்கான, வெளிப்படுத்தலுக்கான, தெளிவுபடுத்தலுக்கான, பகிர்ந்து கொள்வதற்கான, விவாதிப்பதற்கான ஒரு களமாகவும் இவ் அரங்கு செயற்படும். பலரும் கவனிக்காது விட்டுச்செல்லும் இடைவெளிகளை இதனூடாக நிரப்புவதற்கும் நாம் முனைகிறோம். இதில் உங்கள் பங்கும் அதிக பட்சமானது.

கலை உள்வாங்கிக் கொண்ட மற்றுமொருவரம் தான் உணர்வு. உணர்வுகளால் அறையப்படும் சொல்லுக்கு சக்தி அதிகம். மனிதன் என்பவன் உணர்வு என்ற பாத்திரத்தினுள் ஊற்றி வார்த்து எடுக்கப்பட்ட ஒரு வார்ப்பு. உணர்வை உலுப்புவதனூடாக பழத்தையும் பொறுக்க முடியும், குப்பைகளையும் பொறுக்க முடியும். நாம் எதற்காக உலுப்புகிறோம் என்பதே முக்கிமானது. மனித உணர்வுகளை தட்டி எழுப்புவதனூடாக ஒரு நேர்த்தியான பாதைக்கு வழிசமைக்க கலையினால் முடியும். பண்பாடும் அவ்வாறே, மனித மனங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறை பழக்க வழக்கம் என்றாகிவிடுகிறது. இவற்றையெல்லாம் சுத்திகரிக்க வேண்டிய தேவை எமக்கு எப்போதோ எழுந்துவிட்டது. ஆனாலும் அதற்கான செயல் முனைப்பு ஆங்காங்கே ஆமை வேகத்தில் நகர்கிறது உண்மைதான் அது அவ்வளவு எளிதாக கைப்படமுடியாது. இருப்பினும் ஊர் கூடி தேர் இழுக்கலாம் அல்லவா? எல்லாமே ஒரு நம்பிக்கை என்ற புள்ளியை சுற்றி இயங்குவது தானே.

அரங்காலயா பிரதீப்

கோபம், பகைமை, விரக்தி, எரிச்சல், தீண்டாமை என பலவீனங்களை பலமாக கருதிக்கொண்டிராது. குழந்தைப்பருவத்தில் படித்த நீதிக் கதைகளை மீண்டும் பாடப்புத்தகமாக்கும் நிலைக்கு இடமளிக்காது ஒரு உன்னதமான தேடலை நோக்கி, இன்னும் இன்னும் தூரம் பயணிக்க வேண்டிய தேவையை உணர்ந்து ஆரோக்கியமான கலை, ஆரோக்கியமான எழுத்து, அயராத உழைப்பு, சோரம் போகாத துணிவு என்பவற்றை நமதாக்கிக் கொண்டு பாரதியின் கனவினைத்தான் மெய்படுத்தாவிட்டாலும் குறைந்தபட்சம் நொந்து போயுள்ள எமது நெஞ்சத்தின் ஓரத்தில் நம்பிக்கை தளர்ந்து ஒளிந்து இருக்கும் கொஞ்சக் கனவுகளை யாவது மெய்ப்படுத்த வேண்டி ஒரு மானுடத் தேடலுக்கான பயணத்தில் கை கோர்ப்போம்.

மானுடம் வெல்லும்.





## முற்றுப் பெற்றது பல்கலைக்கழக இழுபறி.....

பல்கலைக்கழக நுழைவு தொடர்பாக மீண்டும் விண்ணப்பிக்கவும், கற்கை நெறிகளை மாற்றிக் கொள்வதற்கும் இரண்டு வார கால அவகாசம் வழங்கப்படுவதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

புதிய விண்ணப்பங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன் கற்கை நெறிகளை மாற்றுவது தொடர்பான விண்ணப்பங்கள் கடந்த வெள்ளி வெளியான நாளிதழ்களிலும் பிரசுரமானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலதிக 5609 மாணவர்களை பல்கலைக்கழக நுழைவுக்கு அனுமதி வழங்குமாறு கடந்த வாரம் உயர் நீதிமன்றம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு வேண்டுகோள் விடுத்தது. இதனைத் தொடர்ந்து இழுபறி நிலையில் இருந்த பல்கலைக்கழக நுழைவு தொடர்பான பிரச்சனை முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

## சட்டமும் நீங்களும் நூல் வெளியீடு




15.09.2012 சனிக்கிழமை அன்று மனித உரிமைகள் மேம்பாட்டுக்கும் பாதுகாப்பிற்குமான நிலையம் யு.எஸ். எயிட் நிதி உதவியுடன்சிரேஷ்ட சட்டத்தரணியும் சட்ட உதவி ஆணைக்குழுவின் இயக்குனருமான இரா. திருக்குமாரநாதன் அவர்களால் உருவாக்கபட்ட "சட்டமும் நீங்களும்" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுவரும் சட்டக் கைநூல்களின் வரிசையில் தொழிலாளர் உரிமைகள் தொடர்பான சட்டம், சான்றுகள் சட்டம் ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன

சனிக்கிழமை காலை திருக்கோணமலை ஜேசு கலைக் கழகம் (ஜேசு அக்கடமி) மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் வெளியிடப்பட்டன.

இதில் முதன்மை நபராக யு.எஸ்.எயிட் அமைப்பின் தலைமை அதிகாரி திருமதி சுசன் வார்ட் கலந்து கொண்டு சட்டத்தரணிகளுக்கு புத்தகங்களை வழங்கினார். அதன் பின்னர் நூலாசிரியர் சட்டத்தரணி திருக்குமாரநாதன் நூல்களின் பிரதிகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் திருமலை மாவட்ட இணைப்பாளர் திருமதி குளோறி பிரான்சிசுக்கு வழங்கினார்..

திருமலையில் முதன் முறையாக
DHL
உங்கள், வெளிநாட்டிலுள்ள உறவினர்கள் நண்பர்களுக்கு விரைவாகவும் (ஐக்கே நாட்களுக்குள்) பாதுகாப்பாகவும் பொதிகளை (Parcel) அனுப்ப உங்களின் சிறந்த தெரிவு DHL முறையே!

தற்போது DHL மூலமாக
* உணவுப் பொருட்கள்
* உடைகள்
* பரிசுப் பொருட்கள்
* வாழ்த்து மடல்கள் மற்றும்
* முக்கிய ஆவணங்களை அனுப்பமுடியும்.
இதற்கு நீங்கள் நாடவேண்டியது.
SS DIGITAL'S
58, Vidyalayam Road, Trincomalee.
Hot Line: 026 2224933 / 0773663103
(சண்முக வித்தியாலயத்திற்கு முன்பாக)
DHL

## வர்த்தமானி அறிவித்தல்கள் 07.09.2012

வளிமண்டலவியல் திணைக்களம்

இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின்
பயிற்சி தரத்திற்கு வளிமண்டலவியல் அவதானிப்பாளர்/
தொடர்பாடலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த
போட்டிப் பரீட்சை– 2012

வெளிவாரிவிண்ணப்பதாரிகளுக்காக.- கீழேகுறிப்பிடப்பட்டுள்ளபடி க.பொ.த.(உயர் தரம்) பரீட்சையில் 3 பாடங்களில் ஒரே அமர்வில் சித்திபெற்றிருக்கவேண்டும். (அ)பௌதீகவியல், தூயகணிதம் மற்றும் பிரயோககணிதம் அல்லது (ஆ)பௌதீகவியல், தூயகணிதம் அல்லது பிரயோககணிதம் அல்லது இணைந்த கணிதம் அத்துடன் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களில்

ஒன்று :-இரசாயனவியல்,விலங்கியல்,தாவரவியல்,உயிரியல் மற்றும்விவசாயம்இவற்றுடன்மொழிஅல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் இன்னுமொரு பாடத்தில் திறமைச்சித்தியுடன் 6 பாடங்களில் க.பொ.த. (சா.த) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் காங்கிரசின் இணைவு – தலையிடி யாருக்கு?

மாகாண சபைத் தேர்தல்களின் முடிவின் படி எவருமே தனித்து ஆட்சியைக் கைப்பற்ற முடியாதவாறு மக்கள் வாக்களித்துள்ளனர். அல்லது வாக்களிக்க வைக்கப்பட்டுள்ளனர். 12 ஆசனங்களைத் தக்கவைத்துக் கொண்ட ஆளும் ஐக்கிய மக்கள் சனநாயகக் கூட்டமைப்பு (ஐ.ம.ச.கூ) மேலும் 2 ஆசனங்களை ஊக்குவிப்பாகப் பெற்று மொத்தமாகப் 14 ஆசனங்களுடன் ஆசனப்பட்டியலில் முன்னிலை பெற்றுள்ளது. 11 ஆசனங்களைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (த.தே.கூ) இரண்டாமிடத்தையும், அடுத்த நிலையில் 7 ஆசனங்களுடன் முஸ்லிம் காங்கிரசும் (மு.கா), ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க) 4 ஆசனங்களுடனும், தேசிய சுதந்திர முண்ணனி 1 ஆசனத்துடனும் உள்ளன. இன அடிப்படையிலான விகிதாசாரப்படி முஸ்லிம்கள் முறையே 15 ஆகவும் தமிழர்கள் 13 ஆகவும் சிங்களவர்கள் 9 ஆகவும் தேர்வு செய்யப் பட்டுள்ளனர்.

இந்நிலையில் ஆட்சியமைக்கத் தேவையான ஆகக்குறைந்த ஆசனங்களான 19 ஆசனங்களை எந்தவொரு கட்சியும் பெறாமையால் ஆட்சி அமைப்பதென்பது மற்றொரு கட்சியுடன் இணைந்தே சாத்தியமானதாகின்றது. பொருத்தமான இணைவுகளைக் கருத்தில் கொண்டால் ஐ.ம.ச.கூட்டமைப்பு, மு.கா வுடன் இணையுமாயின் 21 ஆசனங்களைக் கொண்ட அறுதிப் பெரும்பான்மையுடைய உறுதியான அமைப்பாக அந்த இணைவு காணப்படும். ஏனெனில் அந்நிலையில் எதிர்கட்சிகளின் மொத்த ஆசனங்கள் 16 ஆகக் காணப்படுவதால் தாம் நினைத்ததை நடாத்தி முடிக்கும் வலுக்கொண்டதாக இவ்விணைவின் ஊடாக உருவாகும் கிழக்கு மாகாண சபை இருக்கும். மாறாக த.தே. கூ வுடன், மு.கா இணைந்தால் மொத்த ஆசனங்கள் 18 ஆசனங்களைக் கொண்ட வலுக்குன்றிய ஒரு இணைவே உருவாகும். ஏனெனில் இவ்விணைவின் போதான எதிர்க் கட்சிகளின் ஆசனப் பலம் 19 ஆக இருப்பதால் அவ் எதிரணியில் இருக்கும் மூன்று கட்சிகளும் எதிர்த்து வாக்களிக்குமாயின் ஆளும் இவ்விணைவால் கொண்டுவரப்படும் எந்தத் தீர்மானத்தையும் ஆட்டம் கண்டுவிட வைக்க முடியும். இவ்விரண்டையும் தவிர மற்றோர் சாத்தியமான இணைவாக த.தே. கூட்டமைப்பு, ஐ.தே.க வுடனும், தே.சு.மு உடனும் இணையும் பட்சத்தில் 19 ஆசனங்களைப் பெற்று ஆட்சியமைக்கும். இவ்விணைவின் போது எதிர்கட்சிகள் 18 ஆசனங் களைத் தம்மகத்தே வைத்திருப்பதால் ஆளும் இவ்விணைவானது ஒரு அதிகப்படியான ஆசனத்தால் நாம் மேலே பார்த்த இரண்டாவது சாத்தியமான இணைவினை விட உறுதியான நிலையிலிருக்கும். நான்காவதாக ஐ.ம.சு.கூ, த.தே.கூடன் இணையுமாயின் மிகவும் வலுவான நிலையில் உள்ள சிறந்த இணைவாக அவ்விணைவு காணப்படும். 25 ஆசனங்களுடன் மற்றோர் அறுதிப் பெரும்பான்மை கொண்ட இணைவாகவே இவ்விணைவு இருக்கும்.

ஏனைய எந்தவொரு சாத்தியமான இணைவும் இங்கு காணப்படவில்லை. ஏனெனில் ஐ.ம.சு.கூ வுடன் ஐ.தே.க இணைதல் என்பது என்றும் சாத்தியமற்றதே.



இனி முதலாவது இணைவைப் பற்றிச் சிந்திக்கலாம். ஐ.ம.ச. கூட்டமைப்பு பேரம் பேசல்களுக்கு மத்தியில் மு.கா வுடன் இணைவதாகக் கொண்டால் அவ் விணைவு வலுவானதே. ஆனால் அவ்விணைவு உருவாக்கப்போகும் அதிர்வலைகள் உள்நாட்டிலும், சர்வதேசப் பார்வையிலும் ஏராளமே.

ஐ.ம.சு.கூ அரசில் முஸ்லிம்கள் மரியாதையுடனும், சமத்துவத்துடனும் வாழவில்லை என ஏறக்குறைய அனைத்து மு.கா உறுப்பினர்களும் கிழக்கு மாகாண மேடைகளில் பொரிந்து தள்ளியிருக்கின்றார்கள். அதற்கும் மேலதிகமாக தமது பல வணக்கத்தலங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட போது ஆளும் தரப்பு வாய்மூடிக்கிடந்ததை ஓர் அடிப்படைக் காரணமாகக் கொண்டே மு.கா கிழக்கின் தேர்தலில் தனித்து நிற்கும் தீர்மானத்தை எடுத்தது. அத் தீர்மானத்தினை பெரும்பாலான கிழக்கு முஸ்லிம்கள் தமக்கான பெரும் கௌரவமாகக் கருதியிருந்ததுடன் தலைவர் அஷ்ரப் அவர்களின் மறைவின் பின் தமது இனம் ஒரு தலை நிமிர்ந்து நிற்கும் உணர்வை அவர்கள் பெற்றிருந்தனர். கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தனித்து நிற்கும் முடிவின் பின் த.தே.கூ வுடன் இணைந்தே ஆட்சியமைப்பார்கள் என்ற பெரும் எதிர்பார்ப்பும் இம் மக்களிடையே உருவாகியிருந்தது. இவை அனைத்தையும் மு.கா நினைத்துப் பார்க்க வேண்டிய நிலையிலுள்ளது. எந்த வலுவான காரணங்களுக்காக மு.கா. ஐ.ம.சு.கூ உடன் இணைகிறது எனப் பகிரங்கப்படுத்த முடியாது போனால் மு.காவின் அழிவு ஆரம்பமாகும் புள்ளியாகவே அதன் ஐ.ம.சு.கூட்டமைப்புடனான இணைவு இருக்கும்.

ஐ.ம.சு.கூட்டமைப்பு எதிர் கொள்ளும் முக்கிய சவால்களாக இருப்பவற்றுள் தம்மை உதாசீனம் செய்து விட்டு கிழக்குத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்ட மு.காவுடன் எவ்வாறு இணையலாம் என அதன் கட்சிக்குள்ளிருந்து எழுப்பப்படும் கேள்விகளும் அதிருப்தியுமே முக்கியமானதாகும். இவ் அதிருப்தியின் பின்னால் அக்கட்சியிலுள்ள முஸ்லிம் உறுப்பினர்களே பெரும் பங்கு வகிக்கின்றனர். ஏனெனில் அவர்கள் தமது பிரதேசங்களிற் சந்திக்கப்போகும் முஸ்லிம் மக்கள் தொடுக்கும் வினாக்களுக்கு அவர்களே பதிலிறுக்க வேண்டியுள்ளது. அடுத்தாக கிழக்கின் இணைவுக்காக மு.கா முன்வைக்கும் நிபந்தனைகள் ஐ.ம.சு.கூவை மேலும் சிக்கலுக்குள் ஆழ்த்திவிடுகிறது. ஏற்கனவே நாம் மேலே கூறியது போல 15 முஸ்லிம்கள் ஆசனங் களைக் கைப்பற்றியிருப்பதால் முஸ்லிம்களில் ஒருவரையே முதலமைச்சராக்க வேண்டும் என மு.கா நினைக்கின்றது. ஆனால் அவ்வாறு நியமிக்கும் இடத்து சர்வதேசத்தின் வினாவொன்று வரவை நோக்கி விடப்படும் வாய்ப்புள்ளது. அவ்வினாவினை புலம் பெயர் தமிழர் அமைப்புக்களும் தமது பிரசாரங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ளும் நிலையும் காணப்படுகின்றது. அவ் வினா யாதெனில் 13ம் திருத்தச் சட்ட மூடாக தமிழருக்குத் தீர்வை வழங்க முடியும் என இடைக்கிடை கதைவிடும் அரசு அத் திருத்தச் சட்டம் அமுலிலுள்ள போதே கிழக்கு மாகாண சபையின் முதலமை ச்சராய் ஒரு தமிழன் வரமுடியாமல் ஏன் போய்விட்டது? என்பதே அவ் வினா ஆகும். அத்துடன் இத் தேர்தலில் அதிகூடிய விருப்பு வாக்கு களைப் பெற்றுள்ள ஒரு தமிழனால் அப் பதவிக்கு வரமுடியாது போய்விடுகிறது என்ற நிலையில் அத் திருத்தச் சட்டம் தீர்வு தரும் என்ற நம்பிக்கையைக் குறைக்கத் தொடங்கிவிடும். அக் கணத்தில் சர்வதேசத் தமிழர் ஆதரவுத் தரப்புக்கள், 13ம் திருத்தமே தோல்வியடையும் போது ஏனைய எந்தவொரு அரசியலமைப்பின் சட்டமும் தமிழர் தீர்வுக்குச் சாத்தியமற்றது என வாதிடத் தொடங்கி விடும்.

மேலும் இவ்வாறு ஐ.ம.சு.கூ வுடன் மு.கா இணைந்தும் முதலமைச்சர் பதவியை அக்கட்சி இழந்தால் அக் கட்சியின் மீதான நம்பிக்கையை மக்கள் இழக்கத் தொடங்கி விடுவார்கள். ஒரு முதலமைச்சர் பதவியையே பெற்றுக்கொள்ள முடியாத பேரம் பேசலால் எதிர்காலத்தில் வேறு என்ன நன்மைகளை முஸ்லிம்களுக்காக இக்கட்சியால் ஐ.ம.சு.கூட்டமைப பிடமிருந்து பெற்றுத் தர முடியும் என்ற அதிருப்தி அலையை ஏனைய எதிர்க்கட்சி முஸ்லிம்கள் தமக்குச் சாதகமாக்கிக் கொள்வார்கள். அதேவேளை த.தே.கூவுடன் இணைந்தால் தாம் எந்தவொரு விட்டுக் கொடுப்புக்கும் தயார் எனப் பூடகமாக சம்பந்தன் சொல்லியிருப்பதானது அவர்கள் இணையும் பட்சத்தில் முதலமைச்சர் பதவியை விட்டுக்கொடுப்பதற்குத் த.தே.கூ ஆதரவாக உள்ளது எனும் விடயத்தை முஸ்லிம்களிடையே பரவச்செய்துள்ளது. இதனால் எதனையும் விட்டுக்கொடுத்து ஆட்சியமைக்கத் தயாராயுள்ள கட்சியுடன் சேராமல் ஆளும் கூட்டமைப்புடன் ஏன் மு.கா சேரவேண்டும் என்பதை மு.கா தெளிவுபடுத்தியே ஆக வேண்டும்.

அத்துடன் இவ்விணைவு உறுதியான ஒரு செய்தியைத் தமிழருக்கும், சர்வதேசத்திற்கும் தெரியப்படுத்தும். அச் செய்தி யாதெனில் இனி தமிழர் பிரச்சனைக்கான எந்தத் தீர்வுக்கும் தமிழரையே தனித்தரப்பாகக் கொள்ள வேண்டுமேயொழிய தமிழ் பேசும் மக்களை அல்ல என்பதே ஆகும். இனங்களுக்கிடையிலான் நிரந்தரப் பிரச்சனைக்கான தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளுக்கு உட்படும் தரப்புக்களை இவ்விணைவு இரண்டு தரப்புக்களாக மட்டுப்படுத்திவிடும். ஏனெனில் அரச தரப்பென்பது முஸ்லிம்களையும், தமிழ் அதிருப்தியாளர்களையும் தன்னகத்தே கொண்டிருப்பதால் அத் தரப்புடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் மற்றைய தரப்பாக தமிழர் தரப்பு மட்டுமே மாறிவிடும் சாத்தியம் காணப்படும்.

இவ்வாறு மு.கா, ஐ.ம.சு.கூ வுடன் இணையுமாயின் த.தே.கூ வின் தலைவர் ஏன் அவசர அவசரமாக தாம் மு.கா வுடன் இணைந்தே ஆட்சியைக் கைப்பற்றுவோம் என வாக்குவேட்டைக் கூட்டமொன்றில் பேசினார் என்பதை ஆராயவேண்டும். எவ்விதமான அடிப்படைகளுமில்லாமல் அரசியலறிவு முதிர்ந்த த.தே.கூ தலைவர் வாய்தவறி அவ்வாறு சொன்னார் எனச் சொல்வதில் எஞ்ஞாயமுமிருக்காது. எனினும் அந்த அடிப்படையானது மக்களுக்கு வெளிப்படுத்தப்படாத விடத்து ஐ.ம.சு.கூவுடனான முகாவின் இணைவு சம்பந்தரின் முகத்திலும் கறுப்புப் பொட்டொன்றை விட்டுச் செல்லும். தீர்க்கதரிசனமற்ற பேச்சுக்களைக் கொண்ட தலைவரையா நாம் பெற்றுள்ளோம் என்ற கேள்வி தமிழரிடம் மெதுவாகப் பரவத்தொடங்கிவிடும். மேலும் எந்த விட்டுக் கொடுப்புகளுக்கும் தயாரெனில் அவ்வகையான மாகாணசபையொன்றால் தமிழருக்கு கிடைக்கப்போகும் நன்மை என்ற வினாவுக்கு எந்த பதிலைச் சொல்ல த.தே.கூ தயாராயிருக்கின்றது என்பதும் கேள்விக் குறியாகிவிடும்.

யாருடன் இணைவது என்ற முடிவுக்கு மு.கா நீண்டகாலம் எடுத்துக்கொள்வது என்னவோ அவர்களின் பலவீனத்தையே காட்டிநிற்கின்றது. மாகாணசபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் தீர்க்கமான முடிவுகளை மு.கா ஏன் எடுக்கவில்லை என்ற கேள்வி எழுகின்றது. தேர்தலின் பின்னர் தான் யாருடன் இணைவது என்ற முடிவை எடுப்போம் என்ற செய்தியை அனுப்பியபோதே மு.கா தான் வெல்லப்போகும் ஆசனக் கணிப்புக்களில் சந்தேகமாக இருந்தது என்ற முடிவைப் பலரும் எடுத்துவிட்டிருந்தனர். அதாவது கிழக்குக் களத்தில் மு.காவின் அரசியல் தோல்வியடைந்த அனுகுமுறைகளைக் கொண்டிருப்பதாலேயே தான் எத்தனை ஆசனங்களை வெல்லமுடியும் என எதிர்வுகூற மு.காவால் முடியாமற் போயிருந்தது. தற்போதுவரை மு.காவால் இணைவு தொடர்பாகத் தீர்மானம் எடுக்க முடியாமலிப்பதற்கு அதன் பலவீனமே காரணமாகும். முன்னரே இணைவு தொடர்பான தீர்மானத்தை மேற்கொண்டிருப்பின் அதனடிப்படையில் கிழக்குக் களத்தில் பிரச்சாரங்களை மேற்கொண்டிருக்க முடியும். ஆனால் அவ்வாறு முடிவுகளை வெளியிடாமல் பொதுவான ஒரு எண்ணமாக தாங்கள் த.தே.கூவுடன் இணையலாம் என்றவாறு சிருட்டித்த மாயையிலிருந்து மு.கா வால் வெளிவர முடியாமலிருக்கின்றது. அத்துடன் த.தே.கூ வின் தலைவர் பொது மேடையொன்றில் தாம் மு.கா வுடன் சேர்ந்தே ஆட்சி அமைப்போம் எனச் செய்த பிரச்சாரமானது முஸ்லிம்களுக்கு அனுப்பிய செய்தி என்னவாக இருக்கும் எனச் சிந்தித்துப் பார்க்கலாம்.

எனவே முஸ்லிம் காங்கிரசின் இணைவு தொடர்பான தீர்மானமானது கிழக்குத் தேர்தல் களத்தின் அனைத்துக் கட்சிகளுக்கும் தலையிடியைத் தரத்தான் போகின்றது.

– மாயன் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## வெருகலில் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகள்

கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரனையுடன் 21 வயதிற்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் ஈச்சிலம்பற்று பிரதேசச் செயலாளர் பிரிவின் வெருகல் பிரதேசத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளன. அணிக்கு 11 பேரைக் கொண்ட சுற்றுப்போட்டிகளாக நடைபெறவுள்ள இந்த உதைபந்தாட்டப் போட்டி 30.09.2012 அன்று வெருகல் பூமரத்தடிச் சேனை பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. பத்து விளையாட்டுக் கழகங்களைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் இப் போட்டியில் பங்குபற்றவுள்ளனர்.

இதே வகை உதைபந்தாட்டப் போட்டியொன்று குச்சவெளிப் பிரதேச சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டு 22.09.2012ல் நிலாவெளி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளதும் குறிப்படத்தக்கது. இப் போட்டிகளில் சுமார் 15 விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றவுள்ளன.

## "டபுள் சொட் மன்னன்" ஆசை அகாலமரணம்

திருக்கோணமலை மாவட்டத்தின் புகழ்மிகு உதைபந்தாட்ட வீரர் துரைராஜசிங்கம்(ஆசை) அவர்கள் கடந்த வியாழக்கிழமை 13.09.2012 அன்று காலை அகாலமரணமானார். சன்றைஸ் விளையாட்டுக் கழகத்தின் முன்வரிசை வீரராக பல வருடங்கள் விளையாடிய ஆசை "டபுள் சொட் மன்னன்" எனும் அடைமொழியைக் கொண்டிருந்தார்.

இறுதிச்சடங்குகள் வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு கிறீன்வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று திருக்கோணமலை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

## தமிழியல் விருதுகள் மட்டக்களப்பில்


எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் வழங்கும் 2011 ற்கான தமிழியல் விருதுகளுக்கான விருது வழங்கும் விழா இம்மாதம் 23 ஆம் திகதி மட்டக்களப்பில் நடைபெறுகின்றது.

2010 இல் வெளிவந்த கவிதை, கட்டுரை, நாவல், சிறுகதை மற்றும் ஆய்வு நூல்களுக்கான பரிசில்கள் இவ்விழாவில் வழங்கப்பட இருப்பதோடு இவ் விழாவின் உயர் தமிழியல் விருதை பேராசிரியர் சி.மௌனகுரு அவர்கள் பெற்றுக்கொள்ள் உள்ளார் இந் நிகழ்வு இம்மாதம் 23ம் திகதி மட்டக்களப்பு மகாஜனாக் கல்லூரியில் நடைபெறவிருக்கின்றது.

## புத்தககண்காட்சியும் விற்பனையும்

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் குடியியல் கல்விக்கான மாபெரும் கண்காட்சியுடன் இணைந்த கலைநிகழ்ச்சிகளை நேற்றும், இன்றும் கொழும்பு பம்பலப்பிட்டி இராமநாதன் கல்லூரியில் நடாத்துகின்றது.

"நாம் மட்டுமல்ல நீங்களும்" என்று தலைப்பிடப்பட்டுள்ள இக்கண்காட்சியில் சுமார் 15க்கும் மேற்பட்ட கண்காட்சிக் கூடங்களில் "இலங்கை எழுத்தாளர்களின் படைப்புக்கள்" எனும் தலைப்பில் தமிழ், சிங்கள எழுத்தாளர்களின் நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.



திருக்கோணமலையில் உள்ள முருகாபுரியில் பிள்ளையார் முகத்துடன் பிறந்த அதிசய நாய் குட்டி.

## இலங்கைக்கு முதலாவது தங்கப்பதக்கத்தைப் பெற்றுத் தந்த வீரனுக்குப் பதவியுயர்வு.



வலுக்குன்றியோருக்கான உலக ஒலிம்பிக்கில் (பரா ஒலிம்பிக்) பதக்கம் வென்ற பிரதீப் சஞ்சய தரைப்படை இராணுவத்தின் லான்ஸ் கோப்பிரலிலிருந்து அடுத்த பதவிநிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளார். இலங்கைக்கு முதலாவதும், ஒரேயொரு வெண்கலப்பதக்கமுமான பரா ஒலிம்பிக் பதக்கத்தை வென்ற பிரதீப் சனாதிபதியைச் சந்தித்த போதே இப் பதவியுயர்வைப் பெற்றுக்கொண்டார். அத்துடன் 45 இலட்சம் ரூபா பணப்பரிசையும் நிலத்துண்டொன்றையும் பரிசாகப் பெற்றுக்கொண்டார்.

இலங்கை சிங்கப் படையணியின் தரைப்படை வீரரான இவர் 2008ல் கிளிநொச்சியில் நடைபெற்ற தாக்குதலில் வலது கையில் கடும் காயமடைந்த இவருக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## சாரணர் விளக்கக் கூட்டம்

திருக்கோணமலை மாவட்ட சாரணர் சங்கம் மாவட்ட சாரணர் ஒன்று கூடலை 28.09.2012 ஆம் திகதி தொடக்கம் 30.09.2012 வரை 3 தினங்கள் நடத்த உள்ளது. இவ் ஒன்றுகூடல் பற்றிச் சாரணர் தலைவர்களுக்கு விளக்கும் கூட்டம் 15.09.2012 காலை 10.00 மணிக்கு ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் நடைபெற உள்ளது. அனைத்துச் சாரணர் தலைவர்களையும் இக் கூட்டத்தில் கண்டிப்பாக கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது.

## செவிவழிதொடுசிகிச்சை

அனாடமிக் செவிவழிதொடு சிகிற்சை பற்றிய அறிமுக நிகழ்வு 17.09.2012, 18.09.2012 அகிய இரு தினங்களிலும் மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

திருக்கோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் சம்பந்தர் மண்டபத்தில் நடைபெற உள்ள சிகிற்சை பற்றிய அறிமுக நிகழ்வினை இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள அனாடமிக் செவிவழிதொடு சிகிற்சை மருத்துவர் ஸ்ரீதர் பாஸ்கர் விளக்க வுரை ஆற்ற உள்ளார்.

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள்

1. "பரிதி சிந்தும் ஒளி" என்பதன் கருத்து யாது?
   1. சந்திரனில் பட்டுத் தெறிக்கும் ஒளி
   2. சூரியனில் பட்டுத் தெறிக்கும் ஒளி
   3. சூரியனிலிருந்து வெளிவரும் வெளிச்சம்

இலக்கம் 2 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்களிலுள்ள தடித்த எழுத்துக்களின் எதிர்க்கருத்துச் சொல்லின் கீழ் கோடிடுக.

2. களைப்படைந்த வேலையாட்கள் மர நிழலில் **ஓய்வாக** இருந்தனர்.
   1.சுறுசுறுப்பாக 2. அமைதியாக 3. இளைப்பாறுதல்
3. உலகத்திற்கு சூரியன் **ஒளி** கொடுக்கின்றான்
   1. அருள் 2. வெளிச்சம் 3. இருள்
4. சுத்தமாக இருந்தால் **சுகமாக** வாழலாம்.
   1. ஆரோக்கியம் 2. சுகயீனம் 3. நோய்
5. ராமர் நாட்டைத் துறந்து **கானகம்** சென்றார்.
   1. காடு 2. வீடு 3. அரசு
6. "தயவு" என்பதை விளக்கும் இன்னுமொரு இணைமொழி எது?
   1. ஈவிரக்கம் 2. அருமை பெருமை 3. அணைதுணை
7. எந்தக் காலத்தையும் காட்டாத சொல் எது?
   1. இரு 2. வருவாள் 3. பாடினான்
8. பின்வருவனவற்றுள் பன்மை அஃறிணைச் சொல் எது?
   1. பெண்கள் 2. குரங்குகள் 3. மேசைகள்
9. மல்லிகை மரத்தில் பூக்கள் ____________ பூத்திருந்தன.
   1. மெல்ல மெல்ல 2. கொத்துக் கொத்தாக 3. சிரித்துச் சிர்த்து
10. அழகிய மான் துள்ளித் துள்ளி ஓடியது. இங்கு காணப்படும் எழுவாய் அடைமொழி யாது?
    1. அழகிய 2. துள்ளி 3. மான்
11. மிக விரைவாக ஆவியாகி இழக்கப்படும் திரவங்கள்
    1. ஓடிக்கொலோன் 2. தேங்காய் எண்ணெய் 3. மண்ணெண்ணெய்
12. நீரின் மீது மிதக்கக் கூடிய வேறு திரவங்கள்
    1. இரசம் 2. டீசல் 3. கிளிசரின்
13. நீரை வெவ்வேறு இடங்களுக்கு கொண்டு செல்வதற்காக மனிதனால் வெட்டப்பட்டவை?
    1. குளம் 2. வாய்க்கால் 3. கால்வாய்
14. இலங்கையிலுள்ள மிக நீளமான நதி எது?
    1. களு கங்கை 2. களனி கங்கை 3. மகாவலி கங்கை
15. இலை மூலம் இனப்பெருக்கும் செய்யாத தாவர இனம் எது?
    1. சதை கரிச்சான் 2. இஞ்சி 3. பெப்பரோமியா

- பிரதீபா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்துறைக் கலைஞன்

## விஹ்ராஜ்



எங்கள் முன் சவால்கள் நிறையத்தான் இருக்கின்றன என்பது புரிகிறது. காலமும் தன்பாட்டில் தன்னை மாற்றியமைத்த வண்ணமே கடக்கிறது. மனித இனம் அதன் எதிர்பார்ப்புகளை எல்லாமே படியேறிக்கொண்டிருக்கும் காலகட்டத்தில் மாறிவருகிறோம். ஏதோவொரு பாரிய மாற்றம் ஒன்றுக்காக ஏங்கி நிற்கும் நாங்கள் அதுகுறித்து எமது அடுத்த தலைமுறையை தயார்ப்படுத்த வேண்டியதொரு கட்டாயத்திலும் வந்துவிட்டோம். அதற்கிணங்க இவ்வாரம் விஹ்ராஜ் சௌந்தரராஜா மலைமுரசில் அறிமுகமாகிறார்.

7 வயது முதல் இசை , நாடக , பேச்சுக்கலைகளில் தன் திறமையை நிலைநாட்டிவரும் விஹ்ராஜ் தி/கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் தரம் 07 இல் பயிலும் மாணவன் தனது பாலர் கல்வியை கலைமகள் பாலர் பாடசாலையிலே திருமதி. சாரதா ஆனந்தராஜாவிடம் பெற்ற இவரின் பாடும் திறமையை திருமதி. வனஜாகணேசலிங்கம் அவர்கள் 2008 இல் வளர்ந்துவரும் இப்பயிரை முளையிலேயே கண்டெடுத்து ஊக்கமளித்துள்ளார்கள். இனி விஹ்ராஜின் சாதனை முயல்வுக்கான பதிவுகளை காணலாம்.

2009 – English பாட்டு (தேசிய மட்டம் 1[st] இடம்)
2009 – ஆங்கில தினபோட்டி – நாடகம் - 1[st] இடம்.

தங்கப்பதக்கங்கள்
2011 – தமிழ் பாட்டு (தேசிய மட்டம் 1[st] இடம்)
Drums 1[st] இடம்

(தேசிய மட்டம் 1[st] இடம்) தங்கப்பதக்கங்கள்
2012 – தமிழ் பாட்டு
வயலின்
Drums

2010 – பாவோதல் - (தேசியமட்டம் 2[nd] இடம்)

இவ்வாறு இச்சிறு வயதிலேயே பதக்க வேட்டையை ஆரம்பித்திருக்கும் விஹ்ராஜ் தன்னை அரவணைத்து ஊக்கப்படுத்திய திரு.N.இமானுவேல், திருமதி.லதாசெந்தில்நாதன், திருமதி கோமதி, திரு.திருமதி.நவஜோதி நவரெத்தினராஜா மற்றும் தனது தாய் தந்தையான திரு.திருமதி சுமதி சௌந்தரராஜா போன்றோரையும் இன்னும் தன் வளர்ச்சியில் பங்காற்றும் பலரையும் மெல்லிய உதட்டு மலர்வுடன் நினைவு கூறுகிறார். மேலும் "தன்னை மென்மேலும் மெருகூட்டி வரும் பெற்றோருக்கு நன்றிக் கடன் பட்டிருப்பதாகவும், இது போன்று சக மாணவர்களும் பெற்றோருக்கும் பாடசாலை சமூகத்துக்கும் பெருமை தேடிக் கொடுக்க வேண்டும்" என்றும் குறிப்பிடும் விஹ்ராஜ் இன்னும் சில காலங்களில் செல்வி முரசு பகுதியில் இடம் பிடிக்கும் அளவுக்கு தன்னை ஒளிர்வித்துக் கொள்ளவேண்டுமென வாழ்த்தி முடிக்கிறேன்.

- செம்பியன் -

## ஈழத்துப் போர்க்கால சிறப்பிதழாக வருகிறது ஞானம்

மாதாந்தம் வெளிவரும் கலை இலக்கிய சஞ்சிகை "ஞானம்" தனது 150வது இதழை "ஈழத்துப்போர்கால இலக்கிய சிறப்பிதழாக" வெளியிடுகின்றது. இதனை முன்னிட்டு ஆர்வமிக்க படைப்பாளிகளிடமிருந்து ஆக்கங்கள் கோரப்பட்டு இருக்கின்றன. ஆர்வமுள்ள படைப்பாளிகள் தங்கள் ஆக்கங்களை "ஞானம், 46வது ஒழுங்கை கொழும்பு - 06" எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

## பிரதியீடு

காலத்தில் தொலைத்திட்ட
மகிழ்ச்சியும்
மாற்றானிடம் இழந்திட்ட
உரிமைகளும்
சமூகம் பறித்தெடுத்த
சுதந்திரமும்
இறுதி வரையிலும் மூச்சின்றிய
உயிரத் துடிப்பாக வாழும் அவலங்களும்
கவிபாடுகின்றன
சில வேளைகளில் நண்பனாக
சில வேளைகளில் பிரதியீடாக

வர்ஜனா ஜீவக்குமார்
மெதடிஸ்த மகளீர் கல்லூரி,
திருக்கோணமலை.

## கந்தவுர நாடகம் மேடையேறவுள்ள கிழக்கு மாகாணக் கலைவிழா

நடைபெறவிருக்கும் கிழக்கு மாகாண கலை இலக்கிய விழாவில் கந்தவுர (முகாம்) என்ற நாடகம் மேடையேற்றப் படுத்துவதற்கான துரித பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன.

இந்நாடகத்தில் பங்குபற்றும் தமிழ், சிங்கள, முஸ்லிம் கலைஞர்களுக்கான பயிற்சிகளை தொலைக்காட்சி நடிகரும், நாடக இயக்குனருமான கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் உவநந்த வெளிகல்ல அவர்கள் மேற்கொண்டு வருகின்றாரகள்.

இவ்விழாவில் வழங்கப்பட இருக்கின்ற சான்றோர் விருதுகளுக்கான தெரிவுகள் 30.08.2012 ல் நடைபெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# இவ்வாரம் சு.வில்வரத்தினத்தின் கவிதைகள்

## ஒரு பறவையின் குளிர்த்திப் பாட்டு

பறவை ஒன்றின் பாடலை
மொழி பெயர்க்க முனைகிறேன்
முடியவில்லை

விழிக்கிறேன்
அப்பொழுதுதான் காற்றில் மிதந்து வந்த
பறவையின் சிறகொன்று
காலைப்பொழுதின் புற்களின் பனித்துளிகளின் மேல்
மெத்தென அமர்ந்த போது
மெலிதாய் மூச்சு விட்டன பனித்துளிகள்

இப்பொழுது பனித்துளிகளின் மொழியினால்
எழுதினேன் அந்தச் சிறகமர்ந்த பாடலை
கேட்கிறதா பறவையின் பாடலின் மூச்சு

## தீவுகள்

தீவுகள் பறவைகளைப் போல்
பறக்கமுடியாத கடற்பறவைகள்
நீள விரிந்த சிறகுகளே கடலுள் அமிழ்ந்துள
கால்களோ அடியுறை பெரும்பாறையில் நகம்பிணைத்துக்
கௌவியபடியுள்ளன.
தீவுகள் பறவைகளைப் போல
பறக்க முடியாத கடற்பாறைகள்

தீவுகளின் கார்காலம்
தீவுகள் இப்போது பறவைகளின் தீவுகளாயின
சிறகுகள் விரித்தபடி அவை மரங்களில் வந்தமரும்
அழகே அழகு! அழகின் பேரிறக்கமும் அமர்வும்
பறவைகளின் இனிதமர்வை வேர்களிற்கு
கடத்துகின்றன மரங்கள்
தீவுகளின் அடியுறை வேர்களிலே சிலிர்ப்பு
சிலிர்ப்பை ஏந்திய கடலலைகள் சிலம்பொலிக்கின்றன
சீறடிச் சிலம்புகள்

எங்கோ இருந்தொருவன் சங்கெடுத்துதும் மூச்சு
தீவு முழுவதும் ஒலியேந்தித் திரிகிறது
மாலை கவிகிறது : அந்திப்பறவை
துலப்பெரு வெளியில் துயரம் பாடி மறைகிற
இருளின் பொந்திலிருந்து பறவையொன்றேந்திய
வெண்மீன் போல பிறை எழுகின்றது.
பிறை சுரந்தொழுகும் வெண்பால்முகில்:
பாற் கடல் போலாகிறது தீவ:
பாற்கடலின் தீவே : ஈன்ற மணிமுத்துக்கள்
இசை கோர்க்க வெள்ளை இசை விளையும்
வெண்கடலின் அழககே
உள்ளத்து உவகையிலே ஓடமென மிதக்கும்
என்னிதயத்தெழில் உருவே: நீ வாழ்க
புதியதொரு யுகத்தின் அடைகாப்பு மையங்களாய் நாமிருப்போம்.

போரிலும், அழிவிலும், அழியாது உள்பூத்து நிற்கும்
புதுயுகக் கனலே! கனவின் திரளே! திரண்டு
காலத்தின் கோதுடைத்து வெளி வரத் துடிக்கின்ற
சுடர் கொண்ட அறிவின் குவிமுனைக் கொண்டெழும் அலகே!
உனது இளங் கூவலை எனது அக மனப்பொந்தில்
கேட்க ஆவலோடிருக்கிறேன்:
நீ எனது மனக் கோதினைக் மூரலகால் கொத்திப்பிளக்கிறாய்
ஒரு நாள் உனது புதிய பிறப்பின் கூவலை என்னுள் நிகழ்த்தவே,

### மலைமுரசை வாழ்த்துகிறேன்...

## "உதித்தெழுவாய் மலைமுரசே"

செந்தமிழில் முரசு ஒலித்து
சீரிழமை என்றும் குன்றாமல்
நம்முடன் கூறவந்த மல்லமுரசே
இனிமை தன்னை வாழ்வில்
எடுத்து இயம்பில் கடமை
துன்பம் சிறிது நேராமல்
துயர் களைவாய் நீயே
செந்தமிழின் வளர்ச்சி கண்டு
சிகரம் வைத்தால் போல்
மலைமுரசே உதித்தெழுவாய் அம்மா
மங்களமாய் வளர வாழ்த்துகின்றோம்
ஒற்றுமை என்று ஒன்று
உதட்டளவில் என்றும்
இல்லாமல்
சீர்திருத்த கருத்து உரைக்க
சிரம் தாழ்த்தி
வணங்குகின்றோம்
மலைமுரசே

- திருமலை கலைமாறன் -

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## The Sunday Leader

### கோயில் சம்பிரதாயம் தொடர்ந்து நிகழும் முன்னேஸ்வரம் கோயில் மிருக பலி செப்டெம்பர் 12ம் திகதியிலிருந்து தொடங்கும்

இந்து சமய விடயங்களுக்கான சனாதிபதி ஆலோசகர் ரவிசங்கரின் கூற்றுப்படி 'முன்னேஸ்வரம் கோயிலின் மிருகபலியை செப்டெம்பர் 12ம் திகதியிலிருந்து நிகழ்த்துவதற்கு அரசாங்கம் அனுமதித்திருப்பதாக தெரியவருகிறது. இம் முடிவானது ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவிற்கும் முன்னேஸ்வரம் காளி கோயிலின் பிரதம குருவிற்கும் இடையே நிகழ்ந்த உடன்பாட்டில் எட்டப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை, பிரதமகுருவை சந்தித்த ஜனாதிபதியின் செயலாளர் மிருகபலி நடைபெறுவதற்கு காவல்துறையின் பாதுகாப்பு வழங்கப்படுமென்பதையும் உறுதிப்படுத்தியுள்ளார். அத்துடன் தானே பல தடவை இம் மிருக பலியில் கலந்து கொண்டதாக கூறிய அவர் மிருகபலி நிகழ்த்தப்படும் சரியான திகதியைத் தமக்கும் அறியத்தருமாறு கூறியுள்ளார்.

கடந்த காலங்களில் 'தான் என்ன விலை கொடுத்தென்றாலும் இம் மிருகபலியை நிறுத்தப் போவதாக' அமைச்சர் கலாநிதி மேவின் சில்வா கதறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### மூன்று ஊழல் குற்றச்சாட்டுக்களுக்குள்ளாகியுள்ளார் மத்திய மாகாண முதலமைச்சர்.

மத்திய மாகாண முதலமைச்சருக்கெதிராக கொழும்பு மெஜிஸ்ரேட் நீதி மன்றத்தில் மூன்று ஊழல் வழக்குகளை இலஞ்சஊழல் ஆணையம் தாக்கல் செய்துள்ளது. 2008ம் ஆண்டில் ஆண்டு 1 ற்கு பாடசாலைக்கு மாணவர்களை சேர்ப்பது தொடர்பாக இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கு மத்திய மாகாண முதலமைச்சர் உள்ளாகியுள்ளார்.

முதலமைச்சருடன் மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர், ஜனாதிபதியின் இணைப்பாளர் ஆகியோரும் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

### அரபு நாட்டின் மசகு எண்ணெய் 'வேலைக்கு உதவாது'

அரபு நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மசகு எண்ணெயிலிருந்து பிரித்தெடுக்கப்படும் பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெய்யின் அளவு குறைவாக இருப்பதாக பெற்றோலிய வளத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈரானின் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மசகெண்ணெய்யின் மீது அமெரிக்க தடை பிரயோகிக்கப்பட்ட பின் அரேபிய மசகெண்ணெய் இறக்குமதியில் இலங்கை ஈடுபட்டு வருகிறது. 5000 தொன் ஈரானிய மசகெண்ணெயிலிருந்து 1200 தொன் டீசலையும் 1250 தொன் பெற்றோலையும் எஞ்சியவற்றை மண்ணெண்ணையாகவும், உராய்வு நீக்கிகளாகவும் பிரித்தெடுக்கக் கூடியதாக இருந்ததாகக் கூறிய பெற்றொலிய வளத்துறை அமைச்சர் தற்போது அரேபிய மசகெண்ணெண்ய்யின் 5000 தொன்னிலிருந்து 1400 தொன் டீசலையும் 600 தொன் பெற்றோலையுமே பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

### நுரைச்சோலையிலிருந்து மின் வழங்க இன்னும் நாட்கள் ஆகும்

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் பிரதான தவறுகள் திருத்தப்பட்டுள்ளதாக தெரிவித்த மின்வலு அமைச்சர் சம்பிக்க ரணவக்க மின் வழங்கல் வடங்களில் தற்போது திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் பரீட்சார்த்த மின் வழங்கல் நடவடிக்கைகளுக்கு மேலும் பல நாட்கள் ஆகுமெனவும் தெரிவித்தார்.

### களவெடுக்கும் சீனக்குழு

சீனாவில் இருந்து வந்துள்ள குழுவொன்று திட்டமிட்ட முறையில் இரத்தினக்கற்களையும் பெறுமதி வாய்ந்த நகைகளையும் திருடுவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இலங்கை காவல்துறை தரவுகளின்படி கைது செய்யப்பட்ட சீனக் களவாணி தான் களவெடுத்த இரத்தினக்கல் உண்மையான இரத்தினக்கல் இல்லையென தெரிவித்துள்ளதாகவும், அவரை கைது செய்த போது சுமார் 8 போலி இரத்தினங்களை அவரிடமிருந்து கைப்பற்றியதாகவும் தெரிவித்தது.

## அறிவித்தல்கள்

**பாவித்த மின் பிறப்பாக்கிகள் பல விற்பனைக்குள்ளன.**

ஹட்டன் தேசிய வங்கியினால் பாவிக்கப்பட்ட மின்பிறப்பாக்கிகள் இல. 58, மீதோட்டமுல்லவீதி, மீதோட்டமுல்லயில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளன. இவை 2.5 Kw தொடக்கம் 90 Kw வரையான வலுக் கொண்டவை.

இவை செப்டெம்பர் 10, 2012 முதல் செப்டெம்பர் 14.2012 வரை காலை 9.30 தொடக்கம் மாலை 3.30 வரை பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

**அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்திற்கான முகவர்கள்**

சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் நாடு முழுவதிற்கும் மருந்து விநியோகத்திற்கான முகவர்களை நியமிக்கவுள்ளது.

பதிவு செய்யப்பட்ட மருந்தாளர் ஒருவரின் கீழ் இயங்கும் முன்னனுபவம் கொண்ட மருந்தகங்களுக்கும், மருந்து [illegible] முன்னுரிமை வழங்கப்படும். வங்கிப் பிணையும், வாகன [illegible] அடிப்படைத் தகைமைகள் ஆகும்.

## The Sunday Times:

### இலங்கை வரும் ஐக்கிய நாடுகள் சபையின் குழு பொது அமைப்புக்களை சந்திக்கின்றது.

ஐக்கிய நாடுகள் சபையிலிருந்து வரவுள்ள குழுவானது இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பாகவும், தற்போதுள்ள மனிதவுரிமைகளின் நிலை தொடர்பாகவும் அனுமானங்களை பெற்றுக் கொள்வதற்கு பொது அமைப்புக்களை சந்திக்கவுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைசார் குழுக்களை இலங்கைக்குள் அனுமதிப்பதில்லையென அரசாங்கம் கொண்டிருந்த முடிவை மாற்றிக் கொண்டபின், நாட்டினுள் வரவுள்ள இக்குழு பொது அமைப்புக்கள் பலவற்றை சந்தித்து நாட்டின் மனித உரிமை தொடர்பான தகவல்களை திரட்டி அறிக்கையாக உருவாக்கவுள்ளது. Sep, 14 தொடக்கம் 20 வரை இலங்கைத் தீவில் நிலை கொண்டிருக்கும் இக்குழு, ஐநா சபையின் மனித உரிமை அமைப்பின் மூன்று அங்கத்தவர்களைத் தாங்கியிருக்கும்.

### தமிழ் நாட்டிற்கு பயணம் செய்வதற்கான பாதக அறிவுறுத்தலை விலக்குவதற்கு இலங்கை அரசு மறுப்பு.

தமிழ் நாட்டிற்கு பயணம் செய்வதை இயலுமானவரை தடுக்குமாறு இலங்கையர்களுக்கு இலங்கையின் வெளி விவகார அமைச்சால் விடுவிக்கப்பட்ட அறிவுறுத்தலை நீக்குமாறு கடந்த வாரம் தமிழ் நாட்டு வர்த்தக சம்மேளனம் கோரிக்கையை விடுத்திருந்தது. இக்கோரிக்கையை நிராகரித்தது இலங்கை வெளிவிவகார அமைச்சு. "கடந்த சில காலங்களில் இருபதுக்கும் மேற்பட்ட வேண்டத்தகாத நிகழ்வுகள் தமிழ் நாட்டிற்கு பயணம் செய்துள்ள இலங்கையருக்கு நிகழ்ந்துள்ளதாகவும் இலங்கையரை பாதுகாப்பதற்காகவே இவ்வாறு தாம் அறிவித்துள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

### சந்திரிக்கா அம்மையார் A9 ஊடாக யாழ்ப்பாணம்

தனது சனாதிபதிக் காலத்தில் வானூர்திகளூடாக ஏனைய மாவட்டங்களுக்குப் பயணித்த சந்திரிக்கா அம்மையார் போர் முடிவடைந்த பின்னர் A9 பாதையூடாக யாழ் நோக்கிப் பயணமாகியுள்ளார்.. தனது பெயரில் நிறுவப்பட்டுள்ள அறக்கட்டளையின் பெயரால் 100 சூரிய மின் பிறப்பாக்கிக் கலங்களை அச்சுவேலி மற்றும் அரியாலை பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு இலவசமாக வழங்குவதற்கு அவர் பயணித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## வர்த்தமானி அறிவித்தல்கள் 07.09.2012

**இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் வகுப்புIIஇன் (ஆ) பிரிவின் தொலைத்தொடர்பு மற்றும் றேடார் அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை– 2012**

வளிமண்டலவியல் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் தொலைத்தொடர்புமற்றும் றேடார் அலுவலர் பதவிக்குஆட்சேர்ப்புச் செய்வதற்கு ஆண்பெண் இருபாலாரிடம் இருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அடிப்படைக் கல்வித் தகைமையாககுறிப்பிடப்பட்டுள்ளபடி க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் 3 பாடங்களில் ஒரேஅமர்வில் சித்தி பெற்றிருக்கவேண்டும். பௌதீகவியல்,தூயகணிதம் மற்றும் பிரயோககணிதம் அல்லது பௌதீகவியல், தூயகணிதம் அல்லது பிரயோககணிதம் அல்லது இணைந்தகணிதம் அத்துடன் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளபாடங்களில் ஒன்று :-

இரசாயனவியல், விலங்கியல், தாவரவியல், உயிரியல் இவற்றுடன் மொழிஅல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் இன்னுமொரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருக்க வேண்டும். மேற்படி (அ) இல் குறிப்பிட்டுள்ளஅடிப்படைக் கல்வித் தகைமைகளுடன் பின் குறிப்பிடப்படும் தொழில்சார் தகைமைகளில் ஒன்றைவிண்ணப்பதாரர்கள் பெற்றிருத்தல் வேண்டும்.-

மொரட்டுவை பல்கலைக்கழகம் மற்றும் ஹாடிநிறுவனத்தால் வழங்கப்பட்ட தேசிய தொழில்நுட்படிப்ளோமா (இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு) அல்லதுதேசியபயிலுநர்மற்றும் பயிற்சிஅளிக்கும் அதிகார சபையினால் வழங்கப்பட்ட பொறியியலாளர் கல்வி தேசிய டிப்ளோமா (இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு) அல்லது உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா (இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு) அல்லது திறந்த பல்கலைக்கழகத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட தொழில் நுட்படிப்ளோமா (இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு) அல்லது இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியலாளர் பரீட்சையில் முதலாவது பகுதி சித்தி பெற்ற சான்றிதழ் (இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு) அல்லது உயர் தொழில்நுட்ப தகைமைக்குச் சமமான இலங்கை தொழில்நுட்ப சேவைச் சபையினரால் ஏற்றுக்கொள்ளத்தக்க வேறு தகைமைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரம்பமாகின்றது சம்பூர்...

வலையத்தை அமைத்து முகாமை செய்யும் நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ளது. நான்கு பில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடாகக் கொண்டுள்ள சம்பூர்த் தொழிற்றுறை அபிவிருத்தித் திட்டத்தில் அனல் மின் நிலைய அமைப்பு என்பது ஒரு பகுதியாகவேயுள்ளது.

இலங்கை முதலீட்டுச் சபையின் கூற்றுப்படி மூன்று கட்டங்களாக முன்னெடுக்கப்படவுள்ள சம்பூர் தொழிற்துறைத் திட்டம் முதற்கட்டத்தில் 700 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் கடலை ஆழப்படுத்தி கப்பல் நிறுத்தும் சிறு துறைமுகமொன்றை உருவாக்குவதுடன் களஞ்சிய வசதிகளையும் உருவாக்கும் செயலாற்றத்தைக் கொண்டுள்ளது.

## கட்டைப்பறிச்சானில்...

கடந்த 6ம் திகதியே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சில இனம் தெரியாத நபர்கள் மரங்களை களவாடுவதை அறிந்த கட்டைப்பறிச்சான் தெற்கு கிராம அபிவிருத்தி சங்கத்தினர் அங்கு விரைந்த போது அந்நபர்கள் தப்பியோடி விட்டதாகவும், அவர்கள் கொண்டு வந்த உபகரணங்கள் மற்றும் பைபர் படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இயற்கை அனர்த்தங்களின் பாதிப்பை குறைக்கவல்ல இம் மரங்களை பாதுகாத்துத் தருமாறு மூதூர் கிழக்கு மக்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டி நிற்கின்றனர்.

## வாக்களிக்கத் தெரியாத...

மொத்தமாக 1477 அரச அலுவலர்களின் வாக்குகள் நிராகரிக்கப்பட்டவையாக உள்ளன. மூன்று மாவட்டங்களுடனும் ஒப்பிடுகையில் திருக்கோணமலை மாவட்டமே வாக்களிக்க தெரியாத அரச அலுவலர்களை அதிகமாகக் கொண்டுள்ளது.

## புதிய மகாணசபையாலாவது...

மல்லிகைத்தீவுச் சந்தியிலிருந்து உட்பிரதேசங்களுக்கு செல்லும் மக்கள் வீதி பழுதடைந்திருப்பதன் காரணமாக முச்சக்கர வண்டிகளுக்கு அதிக பணத்தை கொடுக்க வேண்டியும் உள்ளது. கடந்த 4 வருடங்களாக பதவியிலிருந்த கிழக்குமாகாண சபையினால் கூட இவ்வீதி திருத்தப்படவில்லை எனவே எதிர் வரும் புதிய மாகாண சபையினாலாவது இவ்வீதி திருத்தப்படுமா? என மக்கள் அங்கலாய்க்கின்றனர். மேலும் இவ்வீதியில் மக்கள் மயப்படுத்தப்பட்ட பேருந்துச் சேவைகள் இடம் பெறுவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

கலை

## அவுஸ்திரேலியப் பயணிகள்...

நாட்களிலும் கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர்கள் பின்னர் காவல்துறையால் கையேற்கப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்ட போது விளக்கமறியல் தடைக்குட்படுத்தப் பட்டிருந்தனர். பின்னர் 03.09ல் சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ள இவர்களின் அடுத்த வழக்குத் தவணை 26.11.2012ம் திகதிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கடற்படையினாலும், புலனாய்வுப் பிரிவினாலும், கொழும்பின் விசேட புலனாய்வுப் பிரிவினாலும் விசாரணைக்குட்படுத்தப் பட்ட பின்னர் இவர்கள் விடுதலையாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருக்கோணமலை மாவட்டத்தின்...

அவர் மேலும் தெரிவித்த போது இலங்கையின் வயதுப்பாகுபாடின்றிய மொத்த வேலையற்றோர் வீதம் 4.2% ஆகவும் இருப்பதாகவும், இவ்வீதம் 2010ல் 5.6% ஆக இருந்ததாகவும் தெரிவித்தார்.

## தபால் பெட்டியின்றி...

தபாலகத்தை தேடி பல கிலோமீற்றர்கள் பயணம் செய்ய வேண்டியுள்ளதால் கச்சேரி அலுவலர்களும், கச்சேரிக்கு வரும் பெருமளவு மக்களும் பெரும் சிரமங்களுக்குள்ளாகின்றனர்.

கலை

## விக்நேஸ்வராவில் நாடக...

கலை நிகழ்ச்சியாக" திருமலை பெருந்தெரு விக்நேஸ்வரா மகாவித்தியாலயத்தில் 18.09.2012 செவ்வாய் மாலை 05.00 மணி தொடக்கம் நிகழ்த்திக் காட்டப்படவுள்ளன. 100ரூபா அனுமதிச்சீட்டை கொண்ட இந் நிகழ்வினால் திரட்டப்படும் நிதியிலிருந்து திருமலை விக்நேஸ்வரா பாடசாலையும், ஸ்ரீ சண்முகா மகளிர் தேசிய பாடசாலையும் கல்வி மேம்பாட்டு நிதியினை பெற்றுக்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தாமதமாகியது தேர்தல்ப்...

பணியக அதிகாரிகள் வராமையால் பெருமளவு அரச உத்தியோகத்தர்கள் தமக்கெனப் பணிக்கப்பட்ட இடங்களில் காத்துக்கிடந்ததைக் காணக்கூடியதாய் இருந்தது. தங்களைக் காலை 6.30 மணிக்கு அறிக்கையிடுமாறு உறுதியாகப் பணித்திருந்ததாகக் குறிப்பிட்ட அவர்கள் தாம் வீணே காலை 8 மணிவரை காத்துக் கிடந்ததை மனக்கிலேசத்துடன் தெரிவித்தனர்

## பாதுகாக்கப்பட்ட...

ரஜமகா விகாரையிலுள்ள கோட்டை எல்லையினுள் உள்ள பண்டைய கோபுர மேடும் அதை அண்மித்துள்ள புதை பொருளியல் சிதைவுகளும் பாதுகாக்கப்பட்ட புதைப்பொருள் நினைவுச் சின்னங்களாக தேசிய மரபுரிமை அமைச்சரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பாதுகாக்கப் படுவதற்கு யாதேனும் ஆட்சேபனைகள் இருக்குமாயின் அவை எழுத்தில் பொருளியற் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு ஒக்டோபர் 04ம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கட்டைப்பறிச்சானில்...

மக்கள் குடியிருப்பின்றி பாடசாலையில் தஞ்சம்புகுந்துள்ளனர்.

இதுதொடர்பாக கிராம அபிவிருத்திச் சங்கங்கள் பிரதேச செயலாளருக்கு உடனடியாக அறிவித்தல் விடுத்துள்ளபோதிலும், தேர்தல் முடிவுகள் சூடுபிடித்துள்ள நிலையில் நிர்க்கதியான மக்களின் அவலநிலை எவரினதும் கண்களுக்கும் இதுவரை புலப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

செந்தூரன்

## ஸ்ரீலட்சுமி நாராயணப்...

அதைத்தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளின் வரிசையில் தென்னிந்திய வீரமணி குழுவினரதும், விஜய் தொலைக்காட்சி புகழ் சுப்பர் சிங்கர் பாடகரது நிகழ்ச்சிகளும் நடைபெறும் என ஆலய வட்டாரங்கள் தெரிவித்தன.

சிராம்

# மூதூர் மாதர் அபிவிருத்திச் சங்கங்களிற்கு பயிற்சி

மூதூர் பிரதேசத்திற்குட்பட்ட கங்குவேலி மற்றும் நல்லூர் பிரதேச மாதர் அபிவிருத்திச் சங்கங்களுக்கு யுத்தத்திற்குப் பின்னரான முதலாவது ஆற்றல் மேம்பாட்டுப் பயிற்சியை விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் வழங்கியுள்ளது. சங்கங்கள் எவ்வாறு ஆவணப்படுத்தலை மேற்கொள்ள வேண்டும் என்ற கருப்பொருளில் ஆவணப்படுத்தல் பயிற்சி நெறியானது கடந்த சனி மற்றும் ஞாயிறு தினங்களில் நடைபெற்று முடிந்துள்ளது. சங்கமொன்றிற்கு 30அங்கத்தவர்களாக கங்குவேலி மற்றும் நல்லூர் பிரதேச மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் அங்கத்தவர்கள் கலந்து கொண்ட இப் பயிற்சி நெறி கடந்த சனி மற்றும் ஞாயிறு தினங்களில் நிகழ்ந்தேறியது.

நிறைவு வேளையின் போது அங்கத்தவர்களின் கருத்துக்களின்படி எவ்வாறு ஆவணமாக்கலை மேற்கொள்ள வேண்டும் என்ற அறிவைத் தாம் முதல் முறையாக பெற்றுள்ளதாகவும் இவ்வகையான பல பயிற்சிகளை தமக்கு வழங்குமாறும் தெரிவித்துக்கொண்டனர்.

**உங்கள் கேள்விகளுக்கு மலைமாடன் பதில் தருகின்றார். கேள்விகளை மலைமுரசிற்கு தபாலிலோ அல்லது மின்னஞ்சலிலோ அனுப்புங்கள்**

## வெருகல் சித்திரவேலாயுதர் சுவாமி கோவில் திருவிழா திட்டமிடற் கூட்டம்

வரலாற்றுச் சிறப்புமிக்க பழம்பதி அருள்மிகு சித்திரவேலாயுதர் சுவாமி கோவில் வருடாந்த தீர்த்தோற்சவப் பெருவிழாவை இவ்வருடமும் சிறப்பாக நடாத்த அறங்காவலர் சபை திட்டமிட்டுள்ளது. அதற்கான பணிகள் தற்போது கோவிலில் இடம்பெற்றுவருகின்றன.

இந்நிலையில் அறங்காவலர் சபையின் போசகரும், வெருகல் பிரதேசச் செயலாளருமாகிய திரு.தனேஸ்வரன் தலைமையில் 2012.09.11 ஆந் திகதி முற்பகல் 10.30 மணிக்கு பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் திட்டமிடற் கூட்டம் இடம்பெற்றது. திருகோணமலை, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் மேற்பார்வை உத்தியோகத்தர் திரு.சர்வேஸ்வரன், வெருகல் பிரதேச சபையின் செயலாளர் திரு.ஜெயபாலன், கோவில் அறங்காவலர் சபையின் கௌரவ கங்காணம் ஞானக்கணேசன் ஆகியோருடன், பிரதேச பொலிஸ் உத்தியோகத்தர்கள், இராணுவ அதிகாரிகள், இலங்கைப் போக்குவரத்து சபையின் உத்தியோகத்தர்கள், மற்றும் கிராம சேவை உத்தியோகத்தர் ஆகிய பலரும் கலந்துகொண்டனர்.

எதிர்வரும் 16 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருக்கும் திருவிழா இவ்வருடம் சிறப்பாக இடம்பெறுவதற்கு ஏற்ற வகையில் பிரதேச செயலாளர் தனது திட்டமிடலை வகுத்துச் சமர்ப்பித்தார். சுகாதாரம், குடிநீர், மின்சாரவசதி, பாதுகாப்பு, கழிவகற்றல், போக்குவரத்து, முதலுதவி போன்ற முக்கிய விடயங்களுக்குப் பொறுப்பானவர்கள் நியமிக்கப்பட்டதுடன் பூசை வழிபாடுகள் அனைத்தும் குறித்த நேரத்தில், யாப்பு விதிமுறைகளுக்கு ஏற்ப இடம்பெறவேண்டும் எனச் செயலாளர் வலியுறுத்தினார்.

கூட்டத்தில் கலந்துகொண்ட சகலரும் தமது ஒத்துழைப்பை வழங்குவதாக உறுதியளித்தனர்.

செந்தூரன்

# வெற்றிக்களிப்பில் விதிகளை மறந்த மக்கள்

தேர்தல் வெற்றிகளை அமைதியான முறையில் தேர்தல் சட்டங்களுக்கு அமைவாக கொண்டாடுமாறு மூதூர் மக்களை, சம்பூர் காவல்துறைப் பொறுப்பதிகாரி அறிவுறுத்தி உள்ளார்.

மூதூர் பிரதேசத்தை அடையாளப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் நாகேஸ்வரன் 10,910 வாக்குகளைப் பெற்று மாகாண சபைக்கு தெரிவான வெற்றியை மூதூர் பிரதேச மக்கள் பட்டாசு கொழுத்தி கொண்டாடினர். ஒரு கட்டத்தில் கொண்டாட்டங்கள் மக்களின் உச்ச மனவுணர்வுகளின் வெளிப்பாடாக வெடிக்கத் தொடங்கிய வேளை அங்கு சென்ற சம்பூர் காவல் துறைப்பொறுப்பதிகாரி இவ்வாறு அறிவுறுத்திச் சென்றுள்ளார்.

# செயற்கை விழித்திரை தயாரித்து விஞ்ஞானிகள் சாதனை

கண்பார்வை அற்றவர்களுக்கு செயற்கை விழித்திரையை பொருத்தும் பரிசோதனைகள் இன்னும் சில ஆண்டுகளில் தொடங்கவிருப்பதாக அமெரிக்க விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். எலி ஒன்றுக்கு செயற்கை விழித்திரையை பொருத்தி அதில் வெற்றிகண்ட விஞ்ஞானிகளே இத்தகைய நற்செய்தியை வெளியிட்டுள்ளனர். அத்தோடு உலகம் முழுவதும் 2கோடியே 50 லட்சம் பேர் கண்பார்வையின்றித் தவிப்பதாகவும் விஞ்ஞானிகள் அதிர்ச்சியளிக்கின்றனர்.

**வியாபாரம் பெருக்க விளம்பரம் செய்யுங்கள்.**
**வர்ண விளம்பரங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்**
தொடர்புகளுக்கு:
159A, 2ம் மாடி, கடல் முக வீதி, திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com, 0754252042
58, வித்தியாலயம் வீதி, திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் திருக்கோணமலை வித்தியாலய வீதியில் 58ம் இலக்கத்திலுள்ள எஸ். எஸ். டிஜிட்டலின் இல் 16. 09. 2012ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.